வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 04.08.2023 வெள்ளிக்கிழமை | இதழ் : 237 | பக்கங்கள் : 16




# தீவகத்தை நேரடியாக நிர்வகிக்க அரசு திட்டம்!

## சட்ட வரைவும் தயாராகி விட்டது என்கிறார் கஜேந்திரகுமார் எம். பி.!

### அரசுக்கு தமிழரசு, ரெலோ, புளொட் துணை!



யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 04

**தீவுகள் முழுவதையும் ஓர் அதிகார சபைக்குள்ளே கொண்டு வந்து, அவற்றின் அனைத்து நிர்வாக பணிகளையும் கொழும்பால் (மத்திய அரசு) நேரடியாக ஆட்சி செய்யப்படும் முறையில் சட்ட வடிவமொன்று தயாரிக்கப்பட்டு, அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட தயார் நிலையில் இருக்கிறது.**

- இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

அத்துடன், தீவகத்துக்கான இந்த அதிகாரக் கட்டமைப்பு என்பது மகாவலி அதிகார சபைத் திட்டத்தையும்விட மிக மோசமான வகையில் தமிழர்களின் தலைவிதியை முற்றிலும் மாற்றியமைக்கக்கூடிய உத்தேச சட்ட வரைவாக அமைந்துள்ளது என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

நேற்றைய தினம் கொக்குவிலில் அமைந்துள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைமைப் பணிமனையில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

11

காணி, பொலிஸ் அதிகாரம்:

# கிடைக்காதவற்றுக்காக காத்திருக்க வேண்டாம்!

## இராஜாங்க அமைச்சர் சனத்

வவுனியா, ஓக. 04

கிடைத்த அதிகாரத்தைப் பயன்படுத்தி அவற்றின் ஊடாக செய்ய முடிந்தவற்றை செய்ய வேண்டும். அதனைவிடுத்து கிடைக்காததற்காக காத்திருப்பது தேவையற்றது - இவ்வாறு மாகாண சபைகளுக்கு காணி, பொலிஸ் அதிகாரம் வழங்குவது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ளார் நீர் வழங்கல் வடிகாலமைப்பு இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த.

நேற்று வவுனியாவுக்கு வருகை தந்த அவர் நிகழ்வு

11

# தமிழ் - சிங்கள முரண்பாட்டை உருவாக்க ஜனாதிபதி முயற்சி

## அத்துரலிய ரத்ன தேரர் சொல்கிறார்

கொழும்பு, ஓக. 04

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதாகக் கூறிக்கொண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமிழ் - சிங்கள இன முரண்பாட்டை தோற்றுவிக்க முயற்சிக்கிறார் - என்று பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

11

# ஹெரோயின் நுகர்ந்தவர் கல்வியங்காட்டில் மரணம்!

யாழ்ப்பாணம், ஓக. 04

ஹெரோயினை அதிகளவில் நுகர்ந்த இளைஞர் ஒருவர் யாழ்ப்பாணத்தில் உயிரிழந்தார்.

இவ்வாறு உயிரிழந்தவர் குருநாகல் மாவட்டத்தை சேர்ந்த லாபீர் றைசூஸ் சமன் (வயது 27) என்று அடையாளம் காணப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

மின்சார உபகரண விற்பனைக்காக குறித்த இளைஞர் யாழ்ப்பாணம் வந்துள்ளார். கல்வியங்காட்டில் அவர் உபகரணங்களை விற்பனை செய்துகொண்டிருந்த வேளை மயங்கி விழுந்துள்ளார்.

அவருடன் வந்தவர் அவரை தங்கியிருந்த

11

# போதை மாத்திரையுடன் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், ஓக. 04

யாழ்ப்பாணம் மாநகரை அண்டியுள்ள பண்ணையில் போதை மாத்திரைகளுடன் வெளிமாவட்டத்தைச் சேர்ந்த ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டார்.

யாழ்ப்பாண சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜகத் விசாந்த தலைமையிலான யாழ். மாவட்ட

11

# கடனட்டை அளவு நுண் பிளாஸ்ரிக் வாராந்தம் மனித உடலில் சேர்கிறது

கொழும்பு, ஓக. 04

ஒவ்வொரு வாரமும் ஐந்து கிராம் அல்லது ஒரு கடன் அட்டை அளவான நுண் பிளாஸ்ரிக் மனிதனின் வயிற்றுக்குள் செல்கிறது என்று ஊட்டச்சத்து நிபுணர் ரொஷான் டெலா பண்டார தெரிவித்துள்ளார்.

நேற்று வியாழக்கிழமை நடந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

நாம் உண்ணும் உணவு மற்றும் குடிதண்ணீர், சுவாசிக்கும் காற்றில் நுண் பிளாஸ்ரிக் துகள்கள் கலந்துள்ளன என்று அவுஸ்திரேலியாவின் நியூகேஸில் பல்கலைக்கழகம் நடத்திய ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

ஒரு நபர் வாரத்துக்கு ஐந்து கிராம் நுண் பிளாஸ்ரிக்கை உட்கொள்கிறார். அதாவது, ஒரு கடன் அட்டையின் அளவு நுண் பிளாஸ்ரிக் மனித உடலில் சேர்கிறது.

இதன்படி, ஒரு மாதத்தில் 20 கிராம் - வருடத்தில்

11


# பிரதமர் தினேஷ் இன்று மட்டக்களப்பு வருகிறார்

## விவசாயிகள் போராட முடிவு

மட்டக்களப்பு, ஓக. 04

பிரதமர் தினேஷ் குணவர்த்தன இன்று வெள்ளிக்கிழமை மட்டக்களப்புக்கு வருகை தரவுள்ளார். அவரின் வருகையை எதிர்த்து விவசாயிகள் போராட்டம் நடத்தவுள்ளனர்.

மாவட்ட செயலகத்தில் பிரதமரின் தலைமையில் உணவு பாதுகாப்பு சம்பந்தமான கூட்டம் நடைபெறவுள்ளது. இதில் பங்கேற்கவே



பிரதமர் மட்டக்களப்புக்கு வருகை தரவுள்ளார் என்று கூறப்படுகின்றது. எனினும், அவரின் வருகைக்கான காரணம்

11

பௌத்த மயமாகவுள்ளதா சுழிபுரம் முருகன் கோயில்? 06

# 13ஐ நடைமுறைப்படுத்துவதால் பாரதூரமான பின்விளைவு நேரும்!

## வெளிவிவகார அமைச்சர் கூறுகிறார்

கொழும்பு, ஓக. 04

அரசமைப்பின் 13ஆவது திருத்தம் நடைமுறைப்படுத்தப்படும்போது பாரதூரமான பின்விளைவுகள் ஏற்படலாம் என்று வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

குறிப்பாக மாகாணங்களுக்கு பொலிஸ் அதிகாரங்களை பகிர்ந்தளிக்கும்போது நெருக்கடிகள் ஏற்படலாம் என்றும் அவர் கூறியுள்ளார்.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் தெற்கு மக்கள் உள்ளிட்ட அனைவரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய நீதியான தீர் வொன்றை பெற்றுக் கொடுப்பது

11

# மின் கட்டணத்தை உயர்த்த மீண்டும் அனுமதி கோரல்!

கொழும்பு, ஓக. 04

மீண்டும் மின்சாரக் கட்டணத்தை அதிகரிப்பதற்கு இலங்கை மின்சார சபை பொது பயன்பாடுகள் ஆணைக் குழுவிடம் அனுமதி கோரியுள்ளது.

மின்சாரக் கட்டணம் குறைக்கப்பட்டு சில வாரங்களே ஆன நிலையில், மீண்டும் கட்டண அதிகரிப்புக்கு அனுமதி கோரப்பட்டுள்ளது.

தொடர்ச்சியாக மின்சாரம் வழங்க மின் உற்பத்தி கப்பல் (power ship) ஒன்றை நிறுவுவது குறித்து அண்மையில் நடந்த அமைச்சரவை கூட்டத்தில் ஆராயப்பட்டது. இவ்வாறான யோசனை திட்டம் ஒன்றை நிறுவுவதற்கே மின்சாரக் கட்டணத்தை மீண்டும் அதிகரிப்பதற்கு இதன் மூலம் அனுமதி கோரப்பட்டுள்ளது என்று தெரிய வருகின்றது.

மின்சார கட்டணத்தை 15 வீதத்தால் குறைப்பதற்கான தீர்மானம் நடைமுறைப்படுத்தப்பட்டு 20 நாட்கள் மாத்திரம் கடந்துள்ள நிலையில் மீண்டும் கட்டணத்தை அதிகரிப்பதற்கு அனுமதி கோரப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இப்படியும் நடக்கிறது

பொதுஜன பெரமுன விலிருந்து ஓர் அணியை பிரித்து எடுத்து அவர்களு டன் ஐக்கிய தேசியக் கட்சிக் கூட்டணி அமைத்து ஜனா திபதி தேர்தலை எதிர் கொள்ள ரணில் தயாராகி வருவது குறித்து இந்தப் பத்தியில் சில நாட்களுக்கு முன்னர் எழுதியிருந் தேன்.

கோட்டாபய ராஜபக்ஷ வின் தனிப்பட்ட செயலா ளராக இருந்த சுகீஸ்வர பண் டார இதற்கான முன்னெடுப் புகளைச் செய்துவருவது குறித்தும் அந்தப் பத்தியில் எழுதியிருந்தது வாசகர்க ளுக்கு நினைவிருக்கலாம்.

இதுவரை நாற்பதுக்கும் அதிகமான எம்.பி.க்கள் - பெரும்பாலும் இளையவர் களைக் கொண்ட இந்த அணி பற்றிய அறிவிப்பு விரைவில் வரலாம் என்றும் அதில் தெரிவித்திருந்தேன்.

ஆனால், அந்த அறிவிப்பு அடுத்த வருடம் ஜனவரி மாதத்துக்கு பின்னுக்குப் போயிருக்கின்றது.

எல்லா ஏற்பாடுகளும் நடந்து முடிந்து விட்டா லும் ஏன் இந்த தாமதம் என்று தெற்கில் இந்த அணியோடு சம்பந்தப்பட்ட சிலருடன் பேசியபோது தான் ஜனாதிபதி ரணிலின் திட்டம் தெரியவந்தது.

ஐக்கிய தேசியக் கட் சியை மறுசீரமைப்பு செய் யாமல் அதன் தலைமையில் மற்றைய கட்சிகளை ஒன்றி ணைப்பதால், ஐக்கிய தேசி யக் கட்சியின் முக்கியத்து வம் குறைந்துவிடும் என்று ஐ. தே. க. தரப்பிலிருந்து ரணிலுக்கு தெரிவிக்கப் பட்டிருப்பதாகவும் அதனா லேயே அவர் கட்சியை மறுசீரமைத்து தலைமைத் துவ சபை ஒன்றை நியமித்து கட்சியை புதுப்பொலிவு டன் நகர்த்திச் செல்ல திட்டமிட்டிருக்கிறா ராம்.

அந்த மறுசீரமைப்பு பணிகள் முடிவடைந்தாலும் இன்னுமொரு சிக்கல் அவ ருக்கு இருக்கின்றது என் கின்றன விசயமறிந்த வட் டாரங்கள்.

அடுத்த வருடம் முதல் காலாண்டிலேயே ஜனாதி பதி தேர்தலை நடத்துவ தற்கு விரும்பும் ரணில் விக்கிரமசிங்க அதற்கான ஏற்பாடுகளை முழுவீச்சில் தொடங்கியிருக்கிறார்.

அடுத்த மாதம் சர்வதேச நாணய நிதியத்தின் இரண் டாம்கட்ட உதவி கிடைக் கலாம் என்று எதிர்பார்க் கப்படுகின்றது. அதனைய டுத்து தேர்தலை இலக்கு வைத்து அடுத்த ஆண்டுக் கான வரவு - செலவுத் திட்டத்தையும் அவர் தாக்கல் செய்தாகவேண் டும்.

அந்த வரவு - செலவுத் திட்டத்தில் மக்களுக்கான நிவரணங்கள் தாராளமாகக் கிடைக்கும் என்று எதிர் பார்க்கப்படுகின்றது. அந்த வரவு - செலவுத் திட்டம் எதிர்வரும் நவம்பர் மாதம் பாராளுமன்றில் சம்ப்பிக்கப் பட்டு ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

அதற்கு முன்னதாக பொதுஜன பெரமுனவிலி ருந்து பிரிந்துவர தயாராக இருப்பவர்களை அணைத் துக்கொண்டால் எஞ்சியிருக் கும் மகிந்த விசுவாசிகள் ரணிலுக்கு எதிராக திரும்பு வதற்கு சந்தர்ப்பம் ஏற்பட லாம் என்பதால் வரவு - செலவுத் திட்டம் நிறைவேற் றப்படும்வரை கொஞ்சம் அடக்கி வாசிப்பது என்று முடிவு எடுக்கப்பட்டிருக் கின்றதாம்.

அதனால்தான், ஜனாதி பதி தேர்தலில் ரணிலுக்கு ஆதரவளிக்க தயாராகிவரும் மொட்டு கட்சியினரின் அணியுடனான கூட்டுக் கான அறிவிப்பு ஜனவரிக்கு தள்ளிப்போயிருக்கின்றது.

தெற்கில் தனக்கு சாதக மான மத்தியதர வர்க்கத்தின ரின் வாக்குகளை இலக்கு வைத்து வரவு - செலவுத் திட்டத்தை தயாரிக்கும் அதேவேளையில், கோட்டா பயவின் ஆட்களின் உதவியு டன் சிங்கள கடும் கோட்பாளர்களின் வாக்கு களையும் இலக்கு வைத்துள் ளார். இதேவேளையில் சிறுபான்மையினரின் வாக்குகளை கவர தொடர்ந்து முயன்று வரு கின்றார்.

அதன் தொடர்ச்சியா கவே முஸ்லிம் இயக்கங்கள் மீதான தடையை நீக்கியது டன் பதின்மூன்றை அமுல் படுத்த தான் விருப்பம் கொண்டிருப்பதுபோல தொடர்ச்சியாக கூறிவரு கின்றார்.

தமிழ் மக்களுக்கு பதின் மூன்றை முழுமையாக வழங்க தான் விருப்பம் கொண்டிருப்பதுபோல கூறிவருகின்ற அதேவேளை யில், பொலிஸ் அதிகா ரத்தை வழங்கப் போவ தில்லை என்று சிங்களவர்க ளையும் திருப்திப்படுத்தி வருகிறார்.

தொட்டிலையும் ஆட்டி பிள்ளையையும் கிள்ளி விடுவதென்பது இது தானோ?

**- ஊர்க்குருவி.**

# கழிவகற்றல் சுத்திகரிப்பு சேவை கட்டணங்களும் அதிகரித்தன!

கொழும்பு, ஒக. 04

தண்ணீர் கட்டண திருத்தத் துக்கு இணையாக நேற்று முதல் கழிவகற்றல் சுத்திகரிப்பு சேவை கட்டணங்களும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இந்த விடயம் தண்ணீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்ட மானின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானியில் குறிப்பிடப் பட்டுள்ளது.

அதற்கமைய, ஏதேனு மொரு மாதத்தில் பாவனை பூச்சியமாக இருந்தாலும் நீர் வழங்கல் மற்றும் கழிவகற்றல் சுத்திகரிப்பு சேவை கட்ட ணத்தை செலுத்தியாகவேண்டும்.

தண்ணீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் தண் ணீர் விநியோகத்துக்கு மேலதி கமாக வேறு சில மாற்று நீர் ஆதாரங்களை பயன்படுத்தப் படும்போது அதற்கான பாவனை கட்டணமாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடி காலமைப்பு சபையின் பொது முகாமையாளர் அந்த தருணத் தில் தீர்மானிக்கும் மேலதிக கட்டணத்தை பாவனையாளர் செலுத்த வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் பொது முகாமையாளரால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர் ஒருவர் வீட்டிற்கு சென்று கட்டணங் களை வசூலிப்பாராயின் அதற்காக நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையினால் தீர்மானிக்கப்படும் சேவை கட் டணத்தை செலுத்த வேண்டி யதும் அவசியமாகும்.

மேலும் நீர் கட்டணம் மற்றும் கழிவகற்றல் சுத்திக ரிப்பு சேவை கட்டணப் பட்டி யல்கள் கிடைக்கப்பெற்று 30 நாட்களுக்குள் செலுத்த தவறும் வாடிக்கையாளர்களின் தண்ணீர் விநியோகம் மற்றும் கழிவகற்றல் சுத்திகரிப்பு சேவை என்பன துண்டிக்கப் படும் என அறிவுறுத்தப்பட் டுள்ளது. (ஐ)

# இரு வேறு பகுதிகளில் இரு சடலங்கள் மீட்பு!

கொழும்பு, ஒக. 04

மன்னார் - ஜப்பான் நட்பு றவு பாலத்திற்கு அருகிலுள்ள கடற்கரையிலிருந்து சடல மொன்று மீட்கப்பட்டுள்ளது.

கிடைக்கப்பெற்ற தக வலுக்கு அமைய சடலம் மீட் கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

35 முதல் 45 வயதுக்கு இடைப்பட்ட ஒருவரே இவ் வாறு உயிரிழந்துள்ளார்.

சடலம் தற்போது மன்னார் வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள் ளது.

இதனிடையே, ஹபரணை வாரச் சந்தைக்கு அருகிலிருந்து சடலமொன்று மீட்கப்பட்டுள் ளது.

40 முதல் 45 வயது மதிக்கத் தக்க ஒருவரே சடலமாக மீட் கப்பட்டுள்ளதுடன், பொலன்ன றுவை வைத்தியசாலையின் பிரேத அறையில் சடலம் வைக் கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேல திக விசாரணைகள் முன்னெ டுக்கப்பட்டுள்ளன. (அ)

# 3 மாடுகளை களவாடி சென்றவர் கைதானார்!

யாழ்ப்பாணம், ஒக. 04

வட்டுக்கோட்டையில் இருந்து 3 மாடுகளை திருடிச் சென்ற ஒருவர் நேற்று வியாழக் கிழமை மானிப்பாய் பொலி ஸாரால் கைது செய்யப்பட் டார்.

வாகனத்தில் மாடுகளை கடத்துவதாக, மானிப்பாய் பொலிஸ் புலனாய்வு பிரிவின ருக்கு கிடைத்த இரகசிய தகவ லின் அடிப்படையில் நவாலி மயானத்துக்கு அருகில் வைத்து மாடுகளை திருடிச் சென்றவரை பொலிஸார் மடக்கிப் பிடித்தனர்.

இதன்போது, யாழ்ப் பாணம் ஐந்து சந்தி பகுதியை சேர்ந்த 28 வயதுடைய நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந் தேகநபரை மல்லாகம் நீதி மன்றத்தில் முற்படுத்த பொலி ஸார் நடவடிக்கைகளை எடுத்துள்ளனர். (ஐ)

## அஜித் ரோகணவின் மனு ஒத்திவைப்பு!

கொழும்பு, ஒக. 04

சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தாக்கல் செய்துள்ள அடிப் படை உரிமை மனு மீதான விசாரணையை உயர்நீதி மன்றம் ஒத்திவைத்துள்ளது.

இதற்கமைய, எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 4ஆம் திகதி குறித்த மனு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

குறித்த மனு முர்து பெர் னாண்டோ, ஷிரான் குண ரத்ன, அச்சல வெங்கப்புலி ஆகிய நீதியரசர்கள் ஆயம் முன்னிலையில் விசாரணைக்கு அழைக்கப்பட்ட போது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள் ளது.

எந்தவித நியாயமான கார ணமுமின்றி தமக்கு வழங்கப் பட்டுள்ள இடமாற்றத்தை வலுவற்றதாக்குமாறு உத்தர விடக் கோரி சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண இந்த அடிப்படை உரிமை மனுவை தாக்கல் செய்துள்ளார் என்பது குறிப் பிடத்தக்கது. (ஐ)

# 'நினைவழியா நாட்கள்' கனடாவில் நூல் அறிமுகம்!



ஒன்ராறியோ, ஒக. 04

தமிழீழ விடுதலைப் புலி களின் ஆரம்பகால செயல்பாட் டாளரான செல்லையா ராஜகுல சேகரம் எழுதிய நினைவழியா நாட்கள் நூலின் அறிமுக விழா கனடாவில் அண்மையில் நடை பெற்றது.

செல்லையா ராஜகுலசேகரம் இளமாறன் என்ற பெயரில் ஹநினைவழியா நாட்கள்ஹ எனும் இந்த நூலை எழுதியுள் ளார். இவர் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆரம்பகால செயல் பாட்டாளர் என்பதுடன், அவ்ரோ குலம் / குலம் அண்ணா என்று அறியப் பட்டார்.

இவரின் இந்த நூல் கடந்த ஆண்டு ஒக்ரோபர் 08 நாள் சுவிஸ் நாட்டில் உள்ள சூரிச் நகரில் வெளியீடு செய்யப் பட்டது. தொடர்ந்து லண்டன், பாரிஸ் நகர்களில் அறிமுக வெளியீடுகள் செய்யப் பட்டன.

கடந்த வெள்ளிக்கிழமை கனடா ஈழமுரசு பத்திரிகையின் அனுசரணையில் இந்த அறிமுக விழா மாதகல் கண்ணன் தலை மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில், ஆய்வு ரையை பேராசிரியர் சந்திர காந்தன், மதிப்பீட்டு உரையை சுப்பிரமணியம் இராசரட்ணம், வெளியீட்டு உரையை நட ராஜா அரியரத்தினம் ஆகி யோர் ஆற்றினர்.

நூலின் முதல் பிரதியை ஈழ வேந்தன் (தமிழ் தேசிய கூட்ட மைப்பின் முன்னாள் பாராளு மன்ற உறுப்பினர் வழங்க, மாவீரர் தமிழேந்தி அப்பாவின் சகோதரி கமலரஞ்சிதம் பெற் றுக்கொண்டார். (ஐ)

ஈழநாடு
Eelanadu
04.08.2023 வெள்ளிக்கிழமை
சோபகிருது வருடம், ஆடி 19

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# ரணிலின் இராமர் பாலம்

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் பாலம் அமைக்கும் திட்டம் ஆராயப்படுகின்றது. இராமர் பாலத்துக்கு பதிலாக வேறு மாற்றுப் பாதையை ஆராயவுள்ளதாகவும் கூறப்படுகின்றது. அண்மையில், இந்தியாவுக்கு கன்னி பயணத்தை மேற்கொண்டிருந்த ரணில் விக்கிரமசிங்க இந்தத் திட்டம் தொடர்பில் ஆராய்ந்திருந்தார். இது தொடர்பில் கருத்துத் தெரிவித்திருக்கும் இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே இந்தத் திட்டத்தை முன்மொழிந்தாரெனவும் அவர் பிரதமராக இருந்த காலமான 2002 - 2004 காலப் பகுதியிலேயே இந்தத் திட்டம் தொடர்பில் ஆர்வம் காண்பித்தார் என்றும் குறிப்பிட்டிருக்கின்றார்.

அவ்வாறாயின், 2005இல் ரணில் ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டிருந்தால் இந்தத் திட்டத்தை அவர் உடனடியாக முன்னெடுத்திருப்பார் என்றே கருதவேண்டியிருக்கின்றது. ஆனால், தமிழ் மக்களின் தேர்தல் பகிஷ்கரிப்பால் திட்டம் முன்னெடுக்கப்படவில்லை. இவ்வாறுதான் நாம் நோக்க வேண்டியிருக்கின்றது. அதேவேளை, அப்போது அமெரிக்காவில் அதிகாரத்திலிருந்த குடியரசு கட்சியும் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியை ஆட்சிக்குக் கொண்டுவருவதில் அதிக ஆர்வத்தைக் காண்பித்திருந்தது. குறிப்பாக அப்போது, அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலராக இருந்த ரிச்சர்ட் ஆர்மிடேஜ் இந்த விடயத்தில் பிரத்தியேக ஆர்வத்தை காண்பித்தாரென 2003-2006 வரையான காலப்பகுதியில் அமெரிக்கத் தூதுவராக இருந்த ஜெப்ரி லுன்டட் தனது ஆய்வறிக்கை ஒன்றில் குறிப்பிட்டிருக்கின்றார். இந்த பின்புலத்தில் நோக்கினால், இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் தேவையாக இருந்த ரணில் விக்கிரமசிங்கவையே தமிழ் மக்கள் நிராகரித்திருக்கின்றனர் என்னும் முடிவுக்கே வரவேண்டியிருக்கின்றது.

தேர்தல் பகிஷ்கரிப்பால்தான் மகிந்த ராஜபக்ஷவால் அதிகாரத்துக்கு வர முடிந்தது என்பது இரகசியமானதல்ல. ஆனால், இறுதியில் தமிழ் மக்களின் அரசியல் எதிர்காலம் தலைகீழானது. விடுதலைப் புலிகள் இயக்கமும் அரசியல் அரங்கிலிருந்து அகற்றப்பட்டது. இப்போது, மீண்டும் ரணில் விக்கிரமசிங்க அடுத்த ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளராக களமிறங்கப் போவதான செய்திகள் வெளிவருகின்றன. 2005இல் தோல்வியடைந்த ரணில் விக்கிரமசிங்க அதன் பின்னர் இடம்பெற்ற மூன்று ஜனாதிபதி தேர்தல்களின்போதும் ஜனாதிபதி வேட்பாளராக ஏற்றுக்கொள்ளப்படவில்லை. தற்போது, நாட்டை மீட்டெடுத்துக் கொண்டிருப்பவர் என்னும் புதிய அடையாளத்துடன் தனது இலக்கை நிறைவுசெய்யும் முயற்சியில் இறங்கியிருக்கின்றார். அன்று முடியாமல்போன திட்டங்களை நடைமுறைப்படுத்தப் போவதாக கூறுகின்றார். இதற்கான மக்கள் ஆணையை கோருகின்றார்.

இந்தப் பின்புலத்தில்தான் இந்தியாவுக்கும் இலங்கைக்குமான நிலத் தொடர்ச்சியை ஏற்படுத்துவதற்கான திட்டங்கள் ஆராயப்படுகின்றன. இந்தத் திட்டங்களை முன்னெடுப்பதற்கு ரணில் ஆட்சியில் இருக்க வேண்டும். ஒருவேளை, ராஜபக்ஷ முகாமை சேர்ந்தவர்கள் எவரேனும் அரியணையில் அமர்ந்தால் நிலைமைகள் ஒரே நாளில் மாற்றமடைந்துவிடும். அம்பாந்தோட்டை துறைமுகத்தை 99 வருட குத்தகைக்கு வழங்கியதன் மூலம் ரணில் விக்கிரமசிங்க தொடர்பில் இந்தியாவுக்கு சாதகமான அபிப்பிராயங்கள் இருப்பதற்கான வாய்ப்புக் குறைவாகவே இருந்தது. இந்த நிலையில், இந்தியாவின் அச்சங்களை போக்கும் நோக்கிலும் ரணில் சில நகர்வுகளை மேற்கொண்டிருக்கலாம். எவ்வாறாயினும், இந்திய - இலங்கை உறவில் ஒரு புதிய அத்தியாயம் தொடர்பிலேயே ரணில் பேசுகின்றார். இதன் எதிர்காலத்தைப் பொறுத்திருந்தே நோக்க வேண்டியிருக்கின்றது. ஆனால், தமிழ் அரசியல் தரப்புகள் எடுக்கும் தீர்மானங்கள் புத்திசாலித்தனமானதாகவும் நீண்டகாலத்தில் தமிழ் மக்களின் நலன்களை பாதிக்காத வகையிலும் அமைய வேண்டும்.

# 6 மாதங்களில் 600 விரிவுரையாளர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர்!

*கொழும்பு, ஓக. 04*

*கடந்த 6 மாதத்துக்குள் 600இற்கும் மேற்பட்ட பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் தமது தொழிலிலிருந்து விலகி நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர் என்று பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்க சம்மேளனத்தின் தலைவர் பேராசிரியர் பரண ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.*

*பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்கத்தின் சம்மேளனம், கல்வி அமைச்சு மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அதிகாரிகள் கடந்த செவ்வாய்க்கிழமை சந்தித்தனர்.*

*இதன்போது, தொழில் ரீதியான சிக்கல்கள் தொடர்பில் கலந்துரையாடினர். அத்துடன், வழங்கப்பட்ட வாக்குறுதிகளுக்கு அமைவாக திருத்தங்களை மேற்கொள்ளாவிட்டால் எதிர்காலத்தில் தொழில்சங்க நடவடிக்கையில் ஈடுபட வேண்டி ஏற்படும் என சங்கம் தெரிவித்துள்ளது.*

*இது தொடர்பில் சம்மேளத்தின் தலைவர் பரண ஜெயவர்த்தன கூறுகையில்,*

*கடந்த இறுதி 6 மாதங்களில் 600இற்கும் மேற்பட்ட பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் தமது தொழிலிருந்து விலகி நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர். இதன் காரணமாக பல்கலைக்கழகங்களில் சில பீடங்களை நடத்திச் செல்வதில் சிக்கல்களை எதிர்கொண்டுள்ளோம். 600இற்கும் அதிகமான வெற்றிடங்கள் நிலவுகின்றன.*

*வரிக்கொள்கை மற்றும் பொருளாதார நெருக்கடிகள் காரணமாக பேராசிரியர்கள் நாட்டை விட்டு வெளியேறுகின்றனர். பேராசிரியர்கள் இவ்வாறு விலகி செல்வதைத் தடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.*

*அரசாங்கம் வரிக்கொள்ளை தொடர்பில் சாதகமான தீர்மானமொன்றை மேற்கொள்ளும் என நாம் கடந்த 6 மாதங்களாக எதிர்பார்த்தோம். ஜூலை மற்றும் செப்ரெம்பர் மாதமளவில் எமக்கு ஏதேனும் நிவாரணங்கள் வழங்கப்படும் என அரசாங்கம் உறுதியளித்தது. இருப்பினும், இதற்கு அரசாங்கம் தயார் இல்லை என தெளிவாகிறது. நாம் இது தொடர்பில் கவலையடைகிறோம்.*

*எனவே, எதிர்காலத்தில் கடுமையான தீர்மானமொன்றை எடுப்பது தொடர்பில் ஏனைய தொழிற்சங்கங்களுடன் கலந்துரையாடி வருகிறோம் - என்றார்.*

*(ஐ)*

## கோண்டாவிலில் தீ விபத்து

*யாழ்ப்பாணம், ஓக. 04*

*யாழ்ப்பாணம் - பலாலி வீதியில் கோண்டாவில் சந்திக்கு அருகாமையில் உள்ள கடையொன்றில் நேற்று வியாழக்கிழமை மதியம் தீ விபத்து ஏற்பட் டது.*

*இதனையடுத்து அவ்விடத்திற்குச் சென்ற யாழ். மாநகர சபையின் தீயணைப்புப் பிரிவினர் தீப்பரவலை கட்டுக்குள் கொண்டு வந்தனர்.*

*தீ விபத்தில், கடையில் இருந்த பெறுமதியான பொருட்கள் தீக்கிரையாகியுள்ளன. கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.*

## பேரா. விக்னேஸ்வரன் நினைவேந்தலும் நினைவுப்பேருரையும்

*யாழ்ப்பாணம், ஓக. 04*

*அமரர் பேராசிரியர் இ. விக்னேஸ்வரனின் நினைவேந்தலும் நினைவுப் பேருரையும் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ளது.*

*இணுவில் அறிவாலய மண்டபத்தில் நடைபெறும் இந்த நிகழ்வில் ஊடகப் பெருவெளியில் செயற்கை நுண்ணறிவு என்ற தலைப்பில் யாழ். பல்கலைக்கழக கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் சி. ரகுராம் உரையாற்றவுள்ளார். (ஐ)*

## உடுவில், கோப்பாயில் நாளை இலவச கண்பரிசோதனை முகாம்!

*யாழ்ப்பாணம், ஓக. 04*

*யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை கண் புரை நோயாளர்களுக்கு இலவச சத்திர சிகிச்சையை மேற்கொண்டு வருகின்றது.*

*இதனடிப்படையில் கண் புரை நோயாளர்களைத் தெரிவு செய்யும் இலவச கண்பரிசோதனை முகாம் நாளை சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் நடைபெறவுள்ளது.*

*கோப்பாய் பிரதேச செயலர் பிரிவை சேர்ந்தவர்களுக்கு கோப்பாய் பிரதேச மருத்துவமனையிலும், உடுவில் பிரதேச செயலர் பிரிவை சேர்ந்தவர்களுக்கு உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையிலும் இந்த முகாம்கள் நடைபெறவுள்ளன.*

*கண்புரை சத்திரசிகிச்சைக்குத் தெரிவு செய்யப்படும் நோயாளர்களுக்கான சத்திரசிகிச்சை மேற்கொள்ளும் திகதி பின்னர் அவர்களுக்கு அறிவிக்கப்படும்.*

*கண்புரை சத்திரசிகிச்சைக்கு தெரிவு செய்யப்படும் நோயாளர்களை அந்தந்தப் பிரதேசத்திற்குரிய மருத்துவமனைகளில் இருந்து யாழ். போதனா மருத்துவமனைக்கு அழைத்து வருவதற்கும், சத்திரசிகிச்சை முடிவடைந்த பின்னர் மீண்டும் யாழ். போதனா மருத்துமனையில் இருந்து அவர்களின் பிரதேசத்திலுள்ள மருத்துவமனைக்கு கூட்டிச்செல்வதற்கான போக்குவரத்து வசதிகள் சுகாதார திணைக்களத்தால் இலவசமாக வழங்கப்படும்.*

*எனவே, கண்புரை சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டிய தேவையுடைய நோயாளர்கள் மேற்படி பரிசோதனை முகாமில் கலந்து கொண்டு தங்களது பெயர்களைப் பதிவுசெய்யுமாறு யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (ஐ)*

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**
குடும்பத்தாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். சொத்து வாங்குவது குறித்து யோசிப்பீர்கள். புதுத் தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி அடையும். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். சிறப்பான நாள்.

**இடபம்**
தவறு செய்பவர்களை தட்டிக் கேட்பீர்கள். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள். வியாபாரத்தில் புது முடிவுகள் எடுப்பீர்கள். பெரிய பொறுப்புகள் தேடி வரும். சிந்தனைத் திறன் பெருகும் நாள்.

**மிதுனம்**
புதிய பாதையில் பயணிக்க தொடங்குவீர்கள். வியாபாரத்தில் அதிரடியான செயல்களால் போட்டிகளை சமாளிப்பீர்கள். உத்தியோகத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். சாதிக்கும் நாள்.

**கடகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் வேலைச்சுமை இருந்து கொண்டே இருப்பதாக ஆதங்கப்படுவீர்கள். அலட்சியம் வேண்டாம். தானுண்டு தன் வேலையுண்டு என்று இருக்க வேண்டிய நாள்.

**சிம்மம்**
பிள்ளைகளால் மகிழ்ச்சியும் உறவினர்களால் ஆதாயமும் உண்டு. வேற்றுமதத்தவர் உதவுவார். வியாபாரம் தழைக்கும். உங்களின் திறமைகள் வெளிப்படும். நன்மை கிட்டும் நாள்.

**கன்னி**
குடும்பத்தினரிடம் மனம் விட்டுப் பேசி மகிழ்வீர்கள். வியாபாரத்தில் ரெட்டிப்பு லாபம் உண்டு. உத்தியோகத்தில் அதிகாரிகள் அதிசயிக்கும்படி நடந்து கொள்வீர்கள். தொட்டது துலங்கும் நாள்.

**துலாம்**
வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். உறவினர்களில் உண்மையுள்ளவர்களை கண்டறிவீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். திருப்தி உண்டாகும்.

**விருட்சிகம்**
திட்டமிட்ட காரியங்களை சிறப்பாக முடிப்பீர்கள். தாய்வழி உறவினர்களுடன் மனஸ்தாபம் வந்து நீங்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் நிம்மதி கிடைக்கும். உழைப்பால் உயரும் நாள்.

**தனுசு**
உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். வியாபாரத்தில் சில மாற்றம் செய்வீர்கள். உயரதிகாரி சில சூட்சுமங்களை சொல்லித் தருவார். முயற்சியால் முன்னேறும் நாள்.

**மகரம்**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். அழகும் இளமையும் கூடும். வியாபாரத்தில் சில தந்திரங்களை கற்றுக்கொள்வீர்கள். மதிக்கப்படுவீர்கள். தடைப்பட்ட வேலைகள் முடியும் நாள்.

**கும்பம்**
ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் எதையோ இழந்ததைப் போல ஒருவித கவலைகள் வந்து போகும். ஊழியர்களிடம் உயர்அதிகாரியைப் பற்றி விமர்சிக்க வேண்டாம். கவனம் தேவைப்படும் நாள்.

**மீனம்**
அனாவசிய செலவுகளை குறைக்க பாருங்கள். வியாபாரத்தில் பாக்கிகளை கறாராகப் பேசி வசூலிக்கப்பாருங்கள். அதிருப்தி உண்டாகும். கடினமாக உழைக்க வேண்டிய நாள்.

# முஸ்லிம் அமைப்புகளின் தடை நீக்கம்: தமிழ்நாட்டின் பாதுகாப்பும் அதிகரிப்பு!

சென்னை, ஓக. 04

இலங்கையில் தடை செய்யப்பட்ட ஐந்து முஸ்லிம் அமைப்புகள் மீதான தடை நீக்கப்பட்டது. இதையடுத்து தமிழ்நாட்டில் பாதுகாப்பு ஏற்பாடுகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. உளவுத்துறையும் அதிவிழிப்பு நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

2019 உயிர்த்த ஞாயிறு தினத்தில் கொழும்பு, நீர்கொழும்பு, மட்டக்களப்பில் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல்கள் 251 பேர் உயிரிழந்தனர். 500இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இதைத் தொடர்ந்து பயங்கரவாதத்துடன் தொடர்புடையவை என்று கூறப்பட்டு 11 முஸ்லிம் அமைப்புகளுக்கு தடை விதிக்கப்பட்டன.

இந்தநிலையில், சிறீ லங்கா தௌகீத் ஜமா அத் அமைப்பு உள்ளிட்ட ஐந்து அமைப்புகள் மீதான தடை அண்மையில் நீக்கப்பட்டது. இந்த அமைப்புகளுக்கு தமிழகத்திலும் நெருங்கிய தொடர்புகள் உள்ளன. இந்த அமைப்புகளை தொடர்ந்து கண்காணிப்பதற்கு இலங்கை - இந்திய நாடுகளின் உளவு அமைப்புகள்நெருங்கிச் செயல்பட இணங்கியுள்ளன.

இதேநேரம் தமிழ்நாட்டில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. அத்துடன், தமிழக உளவுத்துறையும் அதிவிழிப்பு நிலையில் வைக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# பாராளுமன்றத் தேர்தலில் நான் போட்டியிட மாட்டேன்!

## பா. ஜ. க. தமிழ்நாடு தலைவர்

புதுக்கோட்டை, ஓக. 04

எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில் தான் போட்டியிடப் போவதில்லை என பா. ஜ. க. மாநிலத் தலைவர் அண்ணாமலை தெரிவித்தார்.

'என் மண்,என் மக்கள்' எனும் பெயரில் பா. ஜ. க. மாநிலத் தலைவர் அண்ணாமலை நடைபயணம் மேற்கொண்டுள்ளார். புதுக்கோட்டையில் மக்களை சந்தித்தபோது அவர் தெரிவித்தவை வருமாறு,

இந்ததொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்று சட்டத்துறை அமைச்சராக உள்ள எஸ். ரகுபதிக்கு ஊழல் தடுப்புத் துறை யும் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால், அவர் மீது வருமானத்துக்கு அதிகமாக சொத்து சேர்த்த வழக்கு நிலுவையில் உள்ளது.

தமிழகத்தில் தி. மு. க. ஆட்சிக்கு வருவதற்கு முன்பு மாநில அரசு ரூ.5.50 இலட்சம் கோடி கடன் வாங்கியிருந்தது. இப்போது தி. மு. க. ஆட்சிக்கு வந்து 27 மாதங்கள் ஆன நிலையில் ரூ.7.53 இலட்சம் கோடி கடன் வாங்கியிருக்கிறார்கள். அப்படியானால், இங்குள்ள ஒவ்வொரு குடும்ப அட்டைதாரர்கள் மீதும் ரூ. 3.52 இலட்சம் கடன் சுமத்தப்பட்டிருக்கிறது. இதுதான் திராவிட மொடல்.

அடுத்த மக்களவைத் தேர்தலிலும் பா. ஜ. க. வெற்றி பெற்று மீண்டும் மோடிதான் பிரதமராகப் போகிறார். அப்போது இங்கிருந்து பா. ஜ. க. எம்.பி.க்கள் செல்ல வேண்டும். அதற்காகத் தான் இந்த பாத யாத்திரை. அ. தி. மு. க வுடனான கூட்டணி குறித்து தேசிய தலைமைதான் முடிவெடுக்கும். மக்களவை தேர்தலில் நான்போட்டியிட போவதில்லை - என்றார். (ஐ)

# பா. ஜ. க., காங்கிரஸ் கட்சிகள் தமிழின ஒதுக்கலில் இரட்டையர்!

## தமிழர் வாழ்வுரிமை கட்சி வேல்முருகன்

சென்னை, ஓக. 04

தமிழகத்தின் தொடர் எதிர்ப்பையும் மீறி, மேகதாது எனும் இடத்தில் 2 கிலோ மீற்றர் தூரத்துக்கு அளவிடும் பணியை கர்நாடக அரசு முடித்திருப்பது கண்டனத்துக்குரியது என்று தமிழர் வாழ்வுரிமைக் கட்சித் தலைவர் வேல்முருகன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து நேற்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், 'மேட்டூர் அணையின் நீர்மட்டம் 62.05 அடியாகவும், நீர் இருப்பு 26.23 டிஎம்சியாகவும் குறைந்துள்ளது.'

மாதந்திர அடிப்படையில் கர்நாடகாவில் இருந்து தண்ணீர் பெற தமிழ்நாடு அரசு முயற்சி செய்யவில்லை என்பது ஏமாற்றம் அளிக்கிறது. இது ஒருபுறமிருக்க, கடந்த காலங்களில் கர்நாடகம் பல அணைகளை கட்டி, தமிழகத்துக்கு வரவேண்டிய நீரை தடுத்துள்ளது. தற்போது 66 டி. எம். சி. கொள்ளளவில் மேகேதாட்டு அணையை கட்டினால், தமிழ்நாட்டுக்கு ஒரு சொட்டு நீர் கூடாது வராது. இதன் காரணமாக, காவிரி குறுக்கே மேகேதாட்டு அணையை கட்டக் கூடாது என தமிழக வாழ்வுரிமைக் கட்சி உள்ளிட்ட அரசியல் கட்சிகளும், அரசியல் இயக்கங்களும், விவசாய அமைப்புகளும் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றன.

இந்நிலையில், தமிழ்நாட்டின் தொடர் எதிர்ப்பையும் மீறி, மேகேதாட்டு எனும் இடத்தில், 2 கிலோ மீற்றர் தூரத்துக்கு அளவிடும் பணியை கர்நாடக அரசு முடித்திருப்பது கண்டனத்துக்குரியது. அத்துடன், காவிரியின் குறுக்கே அணை கட்ட அந்த மாநில காங்கிரஸ் அரசு தீவிரம் காட்டுகிறது. ஆனால், இது குறித்து எந்த நடவடிக்கையும் எடுக்காத ஒன்றிய பா. ஜ. க. அரசு கைகட்டி வேடிக்கை பார்த்து கொண்டிருக்கிறது.

மேகதாது அணையைக் கட்டி முடிக்க கர்நாடக காங்கிரஸ் அரசுக்கு, ஒன்றிய பாஜக அரசு துணை செய்கிறது. தமிழின ஒதுக்கல் கொள்கையில், காங்கிரஸ், பா. ஜ. க. இருவருமே இரட்டையர்கள் என்பது, மேகேதாது விவகாரத்தில் மீண்டும் நிரூபணமாகி இருக்கிறது - என்றுள்ளது. (ஐ)

# யாருடன் கூட்டணி? தினகரன் அறிவிப்பு

சென்னை, ஓக. 04

வரும் பாராளுமன்ற தேர்தலில் யாருடன் கூட்டணி என்பது தொடர்பில் நவம்பர் மாதத்தில் அறிவிக்கப்படும் என்று அ. ம. மு. க கவின் தலைவர் டி. டி. வி. தினகரன் தெரிவித்துள்ளார்.

"சுற்றுச்சூழலுக்கும், கடல் வளத்திற்கும், மீனவர்களின் வாழ்வாதாரத்திற்கும் பாதிப்பு ஏற்படாமல் திமுக அவரது தலைவருக்கு தனியாக ஓர் இடத்தில் கட்சியின் நிதியை வைத்து நினைவுச்சின்னம் அமைப்பதைத்தான் தமிழ்நாட்டு மக்கள் ஏற்றுக் கொள்வார்கள்

கொடநாடு கொலை வழக்கில் ஜெயக்குமார் பற்றி நாங்கள் ஏதாவது பேசினோமா..? ஜெயக்குமார் ஏன் இதற்கு கருத்து தெரிவிக்க வேண்டும். தலையில் தொப்பி வைத்தால் எடப்பாடி பழனிச்சாமி எம்.ஜி.ஆர் ஆகிவிடுவாரா ?

பாராளுமன்ற தேர்தல் தொடர்பாக நவம்பர் மாதத்தில் கூட்டணி தொடர்பாக முடிவு எடுப்போம். அது காங்கிரசுடனோ அல்லது பா. ஜ. க. கூட்டணியிலோ இடம்பெறலாம். அல்லது தனித்துக்கூட போட்டியிடலாம். அது குறித்து நவம்பரில் அறிவிப்போம்." - என்றார்.

# பொதுஜன பெரமுனவுக்கே அடுத்த தேர்தலிலும் வெற்றி

## கூறுகிறார் பிரசன்ன ரணதுங்க

கொழும்பு, ஒக. 04

**ஜனாதிபதித் தேர்தலுக்காக சரியான சந்தர்ப்பத்தில் பொதுஜன பெரமுன துரும்பை வெளியில் விடும் என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.**



அடுத்த வருடம் தேர்தல்களுக்கான வருடம் என்பதைக் குறிப்பிட்ட அமைச்சர், ஜனாதிபதி வேட்பாளர் மறைத்து வைக்கப்பட்டிருந்தாலும் நாட்டு மக்களின் பெரும்பான்மை வாக்குகள் பொதுஜன பெரமுனவுக்கே உள்ளது என்றும் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

கம்பஹா பகுதியில் அரசியல் செயற்பாட்டாளர்கள் மத்தியில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் அநுரகுமார திஸாநாயக்க, சிவில் செயற்பாட்டாளர்கள், வர்த்தகர்கள், ஜனாதிபதித் தேர்தல்களில் வேட்பாளர்களாக வரிசையில் வருவார்கள். ஜனாதிபதித் தேர்தல் பொதுத்தேர்தல், மாகாண சபைத் தேர்தல், மற்றும் உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் என எந்தத் தேர்தலை நடத்தினாலும் பாரிய வித்தியாசத்தால் வெல்லப்போவது பொதுஜன பெரமுனவே.

போராட்டக்காரர்கள் மற்றும் கலகக் காரர்கள் ஒன்றிணைந்து அழிவுக்கு வித்திட்ட நாடு, தற்போது இயல்பு நிலைக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

நாட்டுக்கான எதிர்காலத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமங்க உறுப்படுத்தியுள்ளார். அந்த வகையில் கடந்த 10 நாட்களில் உலகின் தலைசிறந்த நாடுகளின் தலைவர்கள் நான்கு பேர், ஜனாதிபதியை சந்தித்துள்ளமையானது அரசாங்கம் சர்வதேசத்தின் நம்பிக்கையை உச்சளவில் வெற்றி கொண்டுள்ளதையே காட்டுகின்றது-என்றார். (அ)

# கட்டணமானி பொருத்தாத ஓட்டோக்களை அகற்றும் நடவடிக்கையில் யாழ். பொலிஸ்!




யாழ்ப்பாணம், ஒக. 04

யாழ். நகர்ப் பகுதி ஓட்டோ தரிப்பிடத்தில் இருந்து கட்டணமானி பொருத்தாத ஓட்டோக்களை அகற்றும் நடவடிக்கையை யாழ்ப்பாணம் போக்குவரத்து பொலிஸார் முன்னெடுத்தனர்.

யாழ். நகர் பகுதியில் நேற்று வியாழக்கிழமை காலை முதல் பொலிஸார் குறித்த நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

யாழ். மாவட்டத்தில் வாடகைக்குச் செலுத்தும் ஓட்டோக்களுக்கு கட்டணமானி பொருத்தாமையினால் ஓட்டோ கட்டணங்கள் அதிகளவில் வசூலிக்கப்படுவதாக பல்வேறு முறைப்பாடுகள் கிடைத்தன.

இந்நிலையில் யாழ். மாவட்டத்தில் ஒகஸ்ட் மாதம் முதலாம் திகதியிலிருந்து கட்டணமானி பொருத்தாக ஓட்டோக்கள் சேவையில் ஈடுபட அனுமதிக்கப்படமாட்டாது என யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் அ. சிவபாலசுந்தரன் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# சட்டவிரோதமாக கடலட்டைகள் கொண்டு சென்ற இருவர் கைது!



மன்னார், ஒக. 04

மன்னாரில் இருந்து அனுமதிப்பத்திரம் இன்றி கடலட்டைகளை கொண்டு சென்ற இருவர் நேற்று கைது செய்யப்பட்டனர்.

மன்னார் பிரதான பாலத்தடியில் உள்ள சோதனை சாவடியிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடமிருந்து சுமார் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கடலட்டை குஞ்சுகள் உயிருடன் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சோதனைச் சாவடியில் இராணுவத்தினரால் குறித்த வாகனம் சோதனைக்கு உட்படுத்தப்பட்டபோது குறித்த கடலட்டைகள் அனுமதிப் பத்திரம் இன்றி கொண்டு செல்லப்பட்டமை தெரிய வந்துள்ளது.

இதன்போது கைது செய்யப்பட்ட பல்லவராயன் கட்டு பகுதியைச் சேர்ந்த இரு சந்தேக நபர்களை மன்னார் மாவட்ட கடற்தொழில் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர். (அ)

# கிளிநொச்சி புதிய பஸ் நிலையத்தின் மலசலகூட கழிவு நீரால் அசௌகரியம்



கிளிநொச்சி, ஒக. 04

கிளிநொச்சி மாவட்டத்தில் மத்திய பஸ் நிலையத்தின் மலசல கூடத்தின் கழிவு நீர் பயணிகள் பயன்படுத்தும் வெளி இடங்களில் வெளியேறி நிற்பதனால் அவர்கள் கடும் அசௌகரியங்களை சந்தித்து வருகின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில், புதிதாக அமைக்கப்பட்டுள்ள மத்திய பஸ் நிலையம் கடந்த மார்ச் 28 ஆம் திகதி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் திறந்து வைக்கப்பட்டது. மலசலகூடம், குளியலறை என பல வசதிகளுடன் திறந்து வைக்கப்பட்ட மத்திய பஸ் நிலையம் ஐந்து மாதங்களில் முகம் சுளிக்குமளவுக்கு மாறிவிட்டது என பயணிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

சில பயணிகளின் பொறுப்பற்ற பயன்பாடு மற்றும் முறையான பராமரிப்பு இல்லாமை காரணமாக இந்த நிலை ஏற்பட்டுள்ளது. மலசல கூடத்தின் கழிவு நீர் பயணிகளின் பாதைகளிலும் அவர்கள் பயன்படுத்தும் இடங்களிலும் வெளியேறி காணப்படுவதனாலும், மலசல கூடங்கள் முறையான பராமரிப்பு இன்மையாலும் அவை சுகாதாரமற்ற முறையில் காணப்படுகிறது என பயணிகள் தெரிவிக்கின்றனர். (அ)

# உறவுகளுக்கு சர்வதேச நீதி கிட்டும் வரை போராட்டத்தைக் கைவிடப்போவதில்லை

## காணாமற்போனோரின் உறவினர் அறிவிப்பு



கொழும்பு, ஒக. 04

பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்ட ஆயிரக்கணக்கான தமது உறவுகளுக்கு சர்வதேச நீதி கிடைக்கும் வரை போராட்டத்தை கைவிடப்போவதில்லை என வடக்கு, கிழக்கில் பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சர்வதேச பிரதிநிதிகள் முன்னிலையில் வலியுறுத்தியுள்ளனர்.

இலங்கை வம்சாவளியைச் சேர்ந்த தமிழ் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் கனடாவில் அமைச்சராக பதவியேற்று ஒரு வாரதத்திற்குள், கொழும்பில் உள்ள கனேடிய தூதரகத்தில், நேற்று முன்தினம், உயர்மட்ட வெளிநாட்டு பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் போரினால் பாதிக்கப்பட்ட தாய்மார்கள் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளனர்.

வடக்கு, கிழக்கில் பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் கதி என்னவென்பதை வெளிப்படுத்தவும், இதற்கு காரணமானவர்களை சட்டத்தின் முன் நிறுத்தக் கோரியும் இலங்கையில் தமிழ்த் தாய்மார்கள் நடத்தி வரும் நீண்ட போராட்டத்தின் 2,354ஆவது நாளில், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சங்கத்தின் அம்பாறை மாவட்ட தலைவி தம்பிராசா செல்வராணி, தமது போராட்டத்தின் கோரிக்கைகளை சர்வதேச நீதிமன்றத்தில் முன்வைக்குமாறு வெளிநாட்டுப் பிரதிநிதிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

நீண்டகாலம் இழுத்துச் செல்லாமல் எங்களது போராட்டத்திற்கு தீர்வினைப் பெற்றுத்தர வேண்டுமென கோரினோம். எமது போராட்டத்தை சர்வதேச நீதிமன்றில் முன்வைத்து தீர்வினைப் பெற்றுத்தருமாறு கோரினோம்.

வெளிநாட்டுப் பிரதிநிதிகள் குழு தமது போராட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்குவதாக உறுதியளித்ததாக வவுனியா மாவட்டவலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சங்கத்தின் செயலாளர் சிவானந்தன் ஜெனிற்றா தெரிவிக்கின்றார்.

எமது சாட்சிகள் அழிவதற்கு முன்னர் நீதியை பெற வேண்டும் என்பது தொடர்பில் வலியுறுத்தினோம். எதிர்காலத்தில் எமது போராட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதாக உறுதியளித்துள்ளனர்.

தாம் கோரிய நீதியை வெளிநாட்டவர்கள் பெற்றுத்தருவார்கள் என மன்னார் மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சங்கத்தின் தலைவி மனுவெல் உதயச்சந்திரா நம்பிக்கை வெளியிட்டார்.

எங்கள் பிரச்னை ஜெனிவா வரை சென்றாலும் நியாயமான தீர்வு கிடைக்கவில்லை. இது குறித்து அவர்களிடம் தெரிவித்தோம். எதிர்காலத்தில் அவர்கள் என்ன செய்வார்கள் எனத் தெரியவில்லை. எனினும் நல்ல தீர்வை வழங்குவார்கள் என நம்புகிறோம் என அவர் கூறினார்.

இலங்கையின் வடக்கு, கிழக்கின் எட்டு மாவட்டங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தி காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சங்கத்தின் பிரதிநிதிகள் ஒகஸ்ட் முதலாம் திகதி இலங்கையில் உள்ள கனேடிய தூதரகத்தில் வெளிநாட்டுப் பிரதிநிதிகளுடன் நடைபெற்ற கலந்துரையாடலில் கலந்துகொண்டனர். (அ)

ஈழநாடு



# ரூ. 120 மில்லியன் பெறுமதியான இரும்பு காங்கேசன் சிமெந்து ஆலையில் திருட்டு!

## கடந்த இரண்டு மாதங்களில் மாத்திரம்

கொழும்பு, ஓக. 04

**காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையில் பிரதேச வாசிகள் இரும்பு திருட்டில் ஈடுபட்டு வருவதாகவும், கடந்த இரண்டு மாதங்களில் மாத்திரம் சுமார் 120 மில்லியன் ரூபாய்க்கும் அதிகமான பெறுமதியுடைய இரும்புகள் திருடப்பட்டுள்ளதாகவும் சிமெந்து கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஜகத் தர்மபிரிய தெரிவித்தார்.**

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

தொழிற்சாலைக்கு உரிய பாதுகாப்பு இல்லாத காரணத்தால், தொழிற்சாலைக்கு அருகில் வசிக்கும் பிரதேச வாசிகள் தொழிற்சாலை வளாகத்தினுள் அத்துமீறி நுழைந்து திருட்டுக்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த 33 வருட காலமாக தொழிற்சாலை இராணுவ உயர் பாதுகாப்பு வலயத்தினுள் பாதுகாப்பாக இருந்த நிலையில், கடந்த சில மாதங்களுக்கு முன்னர் இராணுவத்தினர் அப்பகுதியில் இருந்து வெளியேறிய பின்னரே இவ்வாறான திருட்டுகள் அதிகரித்து வருகின்றன.

மேலும் திருட்டுச் சம்பவங்கள் தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. இரும்பு திருட்டை தடுக்க பாதுகாப்புக் குழுவொன்றை தாம் நியமித்துள்ளபோதிலும், திருட்டில் ஈடுபடும் பிரதேச வாசிகளுக்கும், பாதுகாப்புக் குழுவுக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்படுகின்றன-என்றார்.



இதேவேளை, காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை இராணுவ உயர் பாதுகாப்பு வலயத்தினுள் இருந்த காலப் பகுதியில் பெருமளவான இரும்புகள் திருடப்பட்டதுடன், இரும்பு திருட்டுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் சில இராணுவத்தினரும் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)



# பௌத்த மயமாகவுள்ளதா சுழிபுரம் முருகன் கோயில்?

## அச்சத்தில் மக்கள்

யாழ்ப்பாணம், ஓக. 04

சுழிபுரம் பறாளாய் முருகன் ஆலயத்தில் உள்ள நூற்றாண்டு பழமை வாய்ந்த அரச மரம் சங்கமித்தையுடன் தொடர்புடைய அரச மரம் என வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளமை அப்பகுதி மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

குறித்த அரச மரம் தொல்பொருள் சின்னமாக அறிவித்து வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளதால், எதிர்காலத்தில் அரச மரத்தை தொல்பொருள் திணைக்களத்தினர் ஆக்கிரமித்து, புத்தர் சிலைகளை நிறுவி, முருகன் ஆலயத்தை ஆக்கிரமித்து விடுவார்களோ எனும் அச்சம் அப்பகுதி மக்களிடம் எழுந்துள்ளது.

அதேவேளை கடந்த வருடம் மார்ச் மாதம் 15ஆம் திகதி தேரர்கள் சிலர் ஆலயத்துக்கு வந்து சென்ற நிலையில், ஆலய அரச மரத்தின் கீழ் புத்தர் சிலையை வைத்து பிரித் ஓத முனைப்பு காட்டி இருந்தனர். இதற்கு பக்தர்கள் மற்றும் ஊரவர்கள் எதிர்ப்புத் தெரிவித்திருந்ததால், தேரர்கள் அங்கிருந்து வெளியேறி இருந்தனர். இந்நிலையிலையே தற்போது குறித்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. (அ)

# பூநகரி சிமெந்து தொழிற்சாலைக்கு எதிராக நேற்று மக்கள் ஆர்ப்பாட்டம்




கிளிநொச்சி, ஓக. 04

கிளிநொச்சி பூநகரி பொன்னாவெளியில் அமைக்கப்படவுள்ள சிமெந்து தொழிற்சாலைக்கு எதிராக பொதுமக்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றை நேற்று மேற்கொண்டனர்.

வலைப்பாடு, கிராஞ்சி, வேரவில் கிராம மக்களும், மக்கள் அமைப்புக்களும் ஒன்று சேர்ந்து ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டனர்.

பொன்னாவெளி எனும் பழமை வாய்ந்த கிராமத்தில் சிமெந்து தொழிற்சாலைக்காக பல ஏக்கர் காணியை சுவீகரித்து பல மீற்றர்கள் ஆழத்தில் சிமெந்து தொழிற்சாலைக்கான கல் அகழ்வுப் பணிகள் மேற்கொள்வதற்காக ஆரம்ப கட்ட பணிகள் இடம்பெற்று வருகின்றமைக்கு எதிர்ப்புத் தெரி வித்து நேற்று வலைப்பாடு, கிராஞ்சி, வேரவில் ஆகிய மூன்று கிராம மக்களும் இணைந்து ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டனர்.

விவசாய நிலங்களை அழிக்காதே, ஏழை மக்களின் வளங்களை சுரண்டி பிழைக்காதே, சுண்ணக்கல் அகழ்வு வேண்டாம், ரோக்கியோ சிமெந்து கம்பனியே வெளியேறு போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை தாங்கியும் கோசங்களையும் எழுப்பியவாறும் மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (அ)

# மலையக மக்கள் உரிமைகளில் எமக்குத் தீவிர கரிசனை உண்டு

## யாழ். பேரணியில் தியாகராஜா நிரோஷ்

யாழ்ப்பாணம், ஓக. 04

மலையக தமிழ் மக்களின் உரிமைகள் விடயத்தில் கரிசனை வடக்கு-கிழக்கு மக்களிடத்தில் மேலும் அதிகரித்துள்ளதையே இப்பேரணி உணர்த்துவதாக வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளரும் ரெலோவின் யாழ். மாவட்ட பொறுப்பாளருமான தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

மாண்பு மிகு மலையக மக்கள் எழுச்சிப் பயணத்தின் யாழ்ப்பாணப் பேரணி நேற்று வியாழக்கிழமை யாழ். நகரில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு ஊடகங்களுக்குக் கருத்துரைக்கையிலேயே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மேலும், மலையக மக்கள் நாட்டின் பொருளாதாரத்திற்காக முதுகெலும்பாக உழைத்துள்ளனர். ஆனால் இந் நாட்டில் அதிகம் அரசியல் சமூக பொருளாதார கலாச்சார உரிமைகள் விடயத்தில் மறுக்கப்படும் ஓர் தரப்பாக அவர்கள் வாழ்ந்து வருகின்றனர்.

குடியிருப்பதற்கு ஒரு துண்டு நிலத்திற்காகப் போராடுகின்றனர். ஒரு துண்டு நிலத்தை பகிர்ந்தளிப்பதற்கு மாறி மாறி ஆட்சிக்கு வந்த தரப்புக்கள் ஏமாற்றியே வருகின்றன. அதுபோல் அவர்களுடைய ஊதியம் தொடர்பான பிரச்னை தொடர் ஏமாற்றத்திற்குரிய ஒன்றாகவுள்ளது. உழைக்கும் தொழிலாளர் வர்க்கம் குறைந்தபட்ச பொதுநலப் பண்டங்களைப் பெற்றுக் கொள்வதற்குக்கூட ஏங்கவேண்டியுள்ளது. போராட வேண்டியுள்ளது.

பெருந்தோட்டங்களில் தொழிலாளர்களது உரிமைகள் நிலைநிறுத்தப்படாமல் உழைக்கும் மக்களது பிள்ளைகளின் கல்வி, சுகாதாரம், தொழில் பாதுகாப்பு என அத்தனையும் கேள்விக்குள்ளாக்கப்பட்ட நிலையிலேயே மலையக மக்கள் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர் என்பதையிட்டு நாடே வெட்கித் தலைகுனிய வேண்டும்.

இந் நிலையில் மலையக மக்கள் தொடர்பாக விட்டுக்கொடுப்பின்றி செயற்பட வேண்டிய பொறுப்பு வடக்குக் கிழக்கில் எமக்கு உள்ளது-என்றார். (அ)

# கல்வியங்காடு வர்த்தக நிலைய உரிமையாளரின் மீது தாக்குதல்

யாழ்ப்பாணம், ஓக. 04

கல்வியங்காட்டுப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றினுள் நேற்று முன்தினம் புதன்கிழமை வன்முறைக் கும்பல் ஒன்று புகுந்து தாக்குதல் நடத்தியதில் வர்த்தக நிலைய உரிமையாளர் காயங்களுக்கு உள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மூவரடங்கிய வன்முறைக் கும்பல் ஒன்று இரவு கடைக்குள் புகுந்து கண்ணாடி அலுமாரி, சோடா போத்தல்கள் என்பவற்றை அடித்து நொருக்கியதோடு உரிமையாளர் மீது தாக்குதல் நடத்தி விட்டு தப்பிச் சென்றுள்ளது.

உரிமையாளருக்கும், அவரது சகோதரருக்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக குறித்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக ஆரம்பக் கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# உயிரியல் தொழில்நுட்பம் செய்முறை பரீட்சைகள் நாளை முதல் 3 தினங்கள்

கொழும்பு, ஓக. 04

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை 2022 (2023) உயிரியல் தொழில்நுட்ப செய்முறைப் பரீட்சைகள் நாளை முதல் 7 ஆம் திகதி வரை நடைபெறும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்தார்.

செய்முறைப் பரீட்சைகள் 77 மையங்களில் நடத்தப்படும் என்றும் அவர் கூறினார்.

சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் சோதனைகள் நடத்தப்படும். உயர்தரப் பரீட்சை எழுத்துப் பரீட்சைக்கு வராத விண்ணப்பதாரர்கள் செய்முறை பரீட்சையில் பங்கேற்க முடியாது.

பாடசாலை விண்ணப்பதாரர்களின் சேர்க்கை படிவங்கள் ஏற்கனவே அந்தந்தப் பாடசாலைகளின் அதிபர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

மேலும் தனியார் விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் விண்ணப்பதாரர்களின் தனிப்பட்ட முகவரிகளுக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

www.doenets.lk இணையத்தளத்திற்குச் சென்று விண்ணப்ப படிவத்தைப் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம் மற்றும் பாடசாலை விண்ணப்பதாரர்கள், விண்ணப்பதாரர் கல்வி கற்கும் பாடசாலை அதிபர் ஊடாக பாடசாலையின் பயனாளர் பெயர் மற்றும் பெயருடன் அனுமதிப் படிவங்களைப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

இது தொடர்பில் தகவல்கள் தேவைப்படின் 1911, 0112784208, 0112784537, 0112786616 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளலாம். (அ)

# சுகாதார சேவை மீதான நம்பிக்கையை ஜனாதிபதி மீள கட்டியெழுப்பவேண்டும்

## ஐக்கிய மக்கள் சக்தி கோரிக்கை

கொழும்பு, ஓக. 04

**இலவச சுகாதார சேவை மீது மக்களுக்கு இல்லாமல் போயுள்ள நம்பிக்கையை மீண்டும் கட்டியெழுப்ப ஜனாதிபதி நடவடிக்கை எடுக்கவேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் ஜே.சி.அலவத்துவல தெரிவித்தார்.**

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலவச சுகாதார சேவையிலிருந்து மக்களின் உயிரை பாதுகாக்கவேண்டிய நிலைமை இன்று ஏற்பட்டுள்ளது.

தரமற்ற மருந்துகளால் நாட்டின் பல உயிர்கள் இல்லாது போயுள்ளன.

இதனால் மக்கள் மத்தியில் இன்று அச்சம் நிலவி வருவதால், வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்து வருகிறது.

நாட்டிலுள்ள பெரும்பான்மையான மக்களுக்கு தனியார் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற முடியாத நிலையில், பொது வைத்தியசாலைகள் மீது மக்கள் மத்தியில் நம்பிக்கை அற்றுப் போவது உண்மையில் மோசமானதொரு விடயமாகும்.

சுகாதார அமைச்சரோ, வைத்தியசாலைக்கு வரும் அனைத்து நோயாளிகளும் உயிருடன் திரும்பமாட்டார்கள் என்று சர்வ சாதாரணமாக கூறியுள்ளார்.

இவருக்கு மக்கள் உயிர் மீது அக்கறையில்லை. ஜனாதிபதி இந்த விடயம் தொடர்பாக அவதானம் செலுத்தவேண்டும்.

மக்களின் உயிரைப் பாதுகாப்பதோடு, இலவச சுகாதார சேவை மீது மக்களுக்கு இல்லாமல் போயுள்ள நம்பிக்கையையும் மீண்டும் கட்டியெழுப்ப ஜனாதிபதி நடவடிக்கை எடுக்கவேண்டும்-என்றார். (அ)

# மன்னாரில் தேசிய மீலாத் விழா

மன்னார், ஓக. 04

இவ்வாண்டின் (2023) தேசிய மீலாத் விழா எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 28ஆம் திகதி வியாழக்கிழமை மன்னார் மாவட்டத்தில் நடத்தப்படும்.

புத்தசாசன சமய விவகாரங்கள் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரம நாயக்கவின் தீர்மானத்திற்கமைய தேசிய மீலாத் விழா கொண்டாட்டங்களுக்கென மன்னார் மாவட்டம் தெரிவாகியுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் எங்கு தேசிய மீலாத் நிகழ்வுகளை நடாத்துவது என்பது தொடர்பில் ஆராய முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களப்பணிப்பாளர் பைசால் ஆப்தீன் தலைமையில் அதிகாரிகள் குழு ஒன்றும் மன்னார் மாவட்டத்துக்கு களவிஜயமொன்றை மேற்கொண்டது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், பிரதமர், அமைச்சர்கள், சபாநாயகர், பாராளுமன்ற உறுப்பினர்கள் வெளிநாட்டுத் தூதுவர்கள், ராஜதந்திரிகள், உலமாக்கள், புத்திஜீவிகள் எனப் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர். (அ)

# பெருந்தோட்டப் பகுதிகளில் வாழும் சிறார்களின் போஷாக்கு மட்டத்தை அதிகரிக்க வேலைத்திட்டம்

கொழும்பு, ஓக. 04

பெருந்தோட்டப் பகுதிகளில் வாழும் சிறார்களின் போஷாக்கு மட்டத்தை அதிகரிப்பதற் கான வேலைத்திட்டம் தொடர் பான விசேட கலந்துரையாடலொன்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொது செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தலைமையில் அமைச்சில் நடைபெற்றது.

'சேவ் த சில்றன்' அமைப்பின் இலங்கைக்கான பணிப்பாளர் ஜூலியன் செல்லப்பா, பெருந் தோட்ட மனித வள அபிவிருத்தி நிறுவனத்தின் தலைவர் பாரத் அருள்சாமி, சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி காந்தி சௌந்தர்ராஜன், ஆலோசகர் ஹரித்த விக்கிரம சிங்க, பிரத்யேக செயலாளர் மொஹமட் காதர் ஆகியோரும் இச்சந்திப்பில் பங்கேற்றிருந்தனர்.



பெருந்தோட்டப் பகுதிகளில் உள்ள சிறார்களின் போஷாக்கு மட்டத்தை அதிகரிப்பது தொடர்பான வேலைத்திட்டத்தை, பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிறுவனம் ஊடாக முன்னெடுப்பதற்கு இணக்கம் காணப்பட்டது.

இதன் முதற்கட்ட நடவடிக்கையாக 270 பாடசாலைகளுக்கு இலவச மதிய சத்துணவு வழங்க தீர்மானம் எடுக்கப்பட்டது.

அத்துடன், பெருந்தோட்ட அபிவிருத்தி நிறுவனத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் சிறுவர் அபிவிருத்தி நிலையங்களுக்கு இலவச உணவு வழங்குவதற்கான யோசனையும் முன் வைக்கப்பட்டுள்ளது.

ஆரம்பக்கல்வி மேம்பாடு, போஷாக்கு மட்ட அதிகரிப்பு, சிறுவர் பாதுகாப்பு வேலைத் திட்டம் என்பன பற்றியும் இச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டுள்ளன. (அ)

# எரிவாயு விலை உயரும்

கொழும்பு, ஓக. 04

உள்நாட்டு எரிவாயு சிலிண்டர்களின் விலை இந்த மாதம் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக லிட்ரோ காஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

உலக சந்தையில் ஒரு மெற்றிக் தொன் எரிவாயுவின் விலை 85 அமெரிக்க டொலர்களுக்கு மேல் அதிகரித்துள்ளதாக லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்தார்.

அதன்படி இந்த விலை உயர்வு உள்ளூர் சந்தையிலும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் லிட்ரோ எரிவாயு சிலிண்டர்களுக்கான புதிய விலை இன்று அறிவிக்கப்படும் எனவும் எரிவாயு விலை சூத்திரத்தின் அடிப்படையில் மாதந்தோறும் திருத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மீண்டும் ஐ.தே.கவுடன் இணைகிறார் மயோன்

கொழும்பு, ஓக. 04

முன்னாள் உயர்கல்வி பிரதி அமைச்சர் மயோன் முஸ்தபா மீண்டும் ஐக்கிய தேசிய கட்சியில் இணைந்து, அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடவுள்ளார் என தெரிய வருகிறது.

கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார மற்றும் முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகியோர் ஊடாக கட்சியின் தலைவரான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விடுத்துள்ள அழைப்பை மயோன் முஸ்தபா சாதகமாக பரிசீலித்திருப்பதாக அறிய முடிகிறது.

இதையடுத்து சில தினங்களுக்கு முன்னர் ஐ.தே.க. தலைமையகமான சிறிகொத்தவில் செயலாளர் பாலித ரங்கே பண்டார தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றில் அவர் கலந்துகொண்டிருந்தார் என தெரிவிக்கப்படுகிறது.

நாடு பூராகவும் கட்சி புனரமைப்புப் பணிகள் இடம்பெற்று வருகின்ற நிலையில், கல்முனை தொகுதியிலும் கட்சி நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு தலைமைத்துவம் வழங்க முன்வருமாறு மயோன் முஸ்தபாவிடம் இதன்போது வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டாரவின் பங்குபற்றுதலுடன் கல்முனையில் இடம்பெறவுள்ள கட்சியின் புனரமைப்பு கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (அ)

# நிதி மோசடிக் குற்றச்சாட்டில் சிக்கிய பெற்றோலிய கூட்டுத்தாபன அதிகாரி

கொழும்பு, ஓக. 04

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பிரதிப் பொது முகாமையாளர் ஒருவர், பாரியளவிலான மோசடி வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ளதாகவும், இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வர்த்தகப் பிரிவின் சம்மந்தப்பட்ட அதிகாரி மற்றும் சுத்திகரிப்பு நிலையத்தின் பல உயர் அதிகாரிகள் மீது எரிபொருள் பீப்பாய்கள் மாற்றப்பட்டமை தொடர்பில் பல வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், குறித்த எரிபொருளின் பெறுமதி சுமார் 900 கோடி ரூபா எனவும் குறித்த அதிகாரி மேலும் குறிப்பிட்டார்.

குற்றம் சாட்டப்பட்ட அதிகாரி அடுத்த வருடம் ஓய்வு பெறவுள்ளதாகவும், அவர் அமெரிக்கா செல்வதாக தெரிவிக்கப்பட்டிருந்தும் அவர் கனடா சென்றுள்ளதாக தெரியவந்துள்ளதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

குற்றம் சாட்டப்பட்ட அதிகாரி மற்றும் சிலர் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட எரிபொருள் கப்பல்களில் இருந்து ஆயிரக்கணக்கான பீப்பாய்கள் எரிபொருளை வெளியேற்றியுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளதுடன், அதே கூட்டுத்தாபனம் நடத்திய உள்ளக விசாரணையிலும் இதன் உறுதித்தன்மை தெரியவந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த பாரிய எரிபொருள் மோசடி தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினரையும் அணுகியுள்ளதோடு, எதிர்காலத்தில் பெற்றோலியக் கூட்டுத்தாபன உயர் அதிகாரிகள் பலரிடமும் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு வாக்குமூலம் பெறஉள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# சந்தை வியாபாரி மீது மூர்க்கத்தன தாக்குதல்

## படுகாயமடைந்தவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதி

வடமராட்சி, ஓக. 04

வடமராட்சி, மந்திகை பொதுச்சந்தையில் மரக்கறி வியாபாரத்தில் ஈடுபடும் வியாபாரி ஒருவர் தனது வியாபாரம் நிறைவடைந்து வீட்டுக்குச் சென்று கொண்டிருந்தவேளை அவரது ஓட்டோவை மறித்த முகக்கவசம் அணிந்த இருவர் அவர் மீது மூர்க்கத்தனமாக தாக்குதலை நடத்தியுள்ளனர்.

அத்துடன் கண்ணாடிப் போத்தலை உடைத்து அவரின் வயிற்றுப் பகுதியில் குத்த முனைந்தபோது அவர் தடுத்த வேளை அவரது இரண்டு கைகளிலும் காயமடைந்த நிலையில் அபய குரல் எழுப்பியபோது அயலவர்கள் ஓடிச்சென்று அவரை மீட்டு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

புலோலி சிங்கநகரை சேர்ந்த ஜெகன் என்பவரை இவ்வாறு படுகாயமடைந்துள்ளார்.

தாக்குதல் நடத்திய முகமூடி அணிந்த மோட்டார் சைக்கிளில் வந்த ,ருவரும் தப்பிச் சென்றுள்ளனர்.

குறித்த சம்பவம் குறித்து பருத்தித்துறை பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை, குறித்த மரக்கறி வியாபாரி மீது நேற்று முன்தினம் இரவு நடந்த தாக்குதலுடன் மூன்றாவது தடவையாக இவ்வாறு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# ஆழ்ந்த உறக்கம் நல்ல உறக்கம், டிமென்சியா உள்ளிட்ட பல நோய்கள் வராமல் தடுக்க உதவும்!

உறக்கம் என்பது உடல் மற்றும் மனதின் எல்லா செயல்களும் நிறுத்தப்படும் ஒரு நிலை இல்லை. மனித நலத்திற்கு ஆரோக்கியமான உடலும் மனதும் போலவே மூளையும் ஆரோக்கியமாக இருக்க வேண்டியது அவசியம். நல்ல உறக்கம், டிமென்சியா உள்ளிட்ட பல நோய்கள் வராமல் தடுக்க உதவும் என்று சமீபத்தில் ஆய்வாளர்கள் கண்டு பிடித்துள்ளனர்.

உறக்கத்தின் போது நடைபெறும் உயிரி மூளைச்சலவை மூளையில் உருவாகும் நச்சுப்பொருட்களை வடிகட்ட முக்கியமாக உதவுகிறது. ஒவ்வொருநாள் இரவையும் நல்ல உறக்கத்துடன் கழிக்க இது அவசியம் என்று ஆய்வாளர்கள் வலியுறுத்துகின்றனர். நேற்றும் இன்றும் நாளையும் நாம் உயிருடன் இருக்கும் ஒவ்வொரு நாளிலும் விளக்குகளை அணைத்துவிட்டு தூங்க ஆரம்பிக்கும் போது, நம்மையும் அறியாமல் நாம் பாத்திரம் கழுவும் கருவிக்கு இணையான நரம்பியல்ரீதியிலான செயல்பாட்டை இயக்கத் தொடங்குகிறோம்.

இதனுடன் பில்லியன் கணக்கான நரம்புசெல்கள் ஒருங்கிணைந்து சுறுசுறுப்புடன் செயல்படத் தொடங்குகின்றன. ஆரம்பத்தில் அதி உயர் செயல்நிலையை அடையும் இவை, பின்னர் குறைவான வேகத்தில் பரவும் அலைகளை உருவாக்குகின்றன. இதனால் இரத்தம் மூளைக்குள்ளேயும் வெளியிலும் பாயத் தொடங்குகிறது. டயனல எடநநிபை நரம்புத் துடிப்புகள் மூலம் மூளையைச் சுற்றியுள்ள சாம்பல் நிறம் உடைய செரிப்ரஸ் முதுகெலும்புத்தண்டு கூழ்மம் (Cerebros Spinal Fluid CSF) அங்கு உருவாகியிருக்கும் இறந்த அங்கக நச்சுப் பொருட்களைக் கழுவி வெளித்தள்ளுகிறது.

### தூங்காத இரவுகள்

முதல்நாள் சரியாகத் தூங்கவில்லை என்றால் பெரும்பாலானோர் மறுநாள் அவர்களின் மனப்போக்கு மற்றும் நினைவாற்றல் பாதிக்கப்பட்டிருப்பதை உணர்கின்றனர்.

நீண்டகால மூளையின் நலத்திற்கு இந்தச் சலவை செயல் முக்கியம் என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். எல்லா உயிர்ச் செயல்பாடுகளும் தூக்கத்தின் போது நிறுத்தப்படுவதில்லை. மாறாக உறக்கத்தின்போதே செயல் ஊக்கத்துடன் மூளை வேலை செய்கிறது என்று உறக்க நிலையில் இருக்கும் மனிதர்களிடம் இந்த பம்பின் செயல்முறையை படமெடுத்த யு எஸ் பாஸ்டன் பல்கலைக்கழகத்தின் உயிரி மருத்துவப் பொறியியல் துறை துணைப் பேராசிரியர் லோரா லூயிஸ் கூறுகிறார்.

ஒழுங்கான தூக்கத்தை நாம் தினமும் பெறவில்லை என்றால் இந்த நச்சு உப பொருட்கள் சேர்ந்துபோகும். இது டிமென்சியா மற்றும் பிற மூளை நோய்கள் ஏற்படக் காரணமாகிறது. வயதாகும் போது நாம் குறைவாகவே தூங்குகிறோம். இதனால் இக்கழிவுகளை வெளியேற்ற முடியாமல் போகிறது. விஞ்ஞானிகள் நல்ல தூக்கத்தை எவ்வாறு பெறுவது என்பது பற்றி நீண்டகாலமாக ஆராய்ந்து வருகின்றனர்.

2012ல் இது பற்றி ஒரு முக்கியக் கண்டுபிடிப்பு நிகழ்த்தப்பட்டது. அமெரிக்காவின் ராச்செஸ்ட்டர் (Rochester) பல்கலைக்கழகத்தின் மருத்துவ மையத்தைச் சேர்ந்த பேராசிரியர் மேக்கன் நெடெர்கார்ட் (Prof Maiken Nedergaard) அவரது ஆய்வுக்குழுவினருடன் இணைந்து அதற்கு முன்புவரை அறியப்படாத, தூக்கத்தின்போது மூளை என்னும் மனித உடலின் மிக முக்கிய உறுப்பில் தன்னைத் தானே சுத்தப்படுத்திக் கொள்ள நடைபெறும் வாழ்வியல் செயல்களைக் கண்டுபிடித்தனர்.

மூளையில் இருக்கும் இரத்தக்குழாய்களைச் சுற்றியுள்ள சிறிய தொடர் பாதைகள் சி எஸ் எஃப் கூழ்மத்தை நரம்பு துடிப்புகளின் உதவியுடன் மூளைத் திசுக்கள் வழியாகத் தள்ளி இரத்தத்துடன் வேகமாகக் கலந்து கழிவுகளை வடிகட்டி வெளியேற்றும் செயலில் ஈடுபடுகின்றன என்பது கண்டறியப்பட்டது. உடலில் இருக்கும் க்லிம்பாட்டிக் (glymphatic) செல்கள் போன்ற அமைப்பை உடைய மூளையில் உள்ள க்லிம்பாட்டிக் செல்கள் இந்த நிகழ்வை மீண்டும் மீண்டும் செய்கின்றன.

இவை நச்சுப்பொருட்கள் வெளியேற்றம் தவிர குளுக்கோஸ், புரதங்கள், அமினோ அமிலங்களின் விநியோகம் மற்றும் நரம்பியல் தொடர்புகளுக்கு உதவுகின்றன. இவை மூளையில் சிறப்பாகக் காணப்படும் க்ளையல் (glial) என்ற செல்களின் உதவியுடன் மேலாண்மை செய்யப்படுகின்றன. பகலில் மிகுந்த செயல்திறனுடன் இயங்கும் நியூரான் நரம்பியல் செல்கள் ஏராளமான கழிவுகளை உருவாக்குகின்றன. இவை வெளியேற்றப்படுவது முக்கியம்.





ஒரு மீன் வளர்ப்புத்தொட்டியில் வடிகட்டி இல்லாவிட்டால் மீன்கள் அவை வெளியேற்றும் கழிவுகளாலேயே அவை உயிரிழக்கும். இதுபோலவே மூளையில் சேகரமாகும் கழிவுகளும். அல்சைமர்ஸ் நோயாளிகளின் மூளையில் சேரும் பல நச்சுகளில் ஒன்று பீட்டா-அமைலாய்ட் (beta-amyloid). இது மூளைச்செல்களின் இயக்கத்தை பாதிக்கிறது. இந்தக் கழிவு அதிக அளவில் தூக்கத்தின்போது நீக்கப்படுகிறது என்று நெடெர்கார்ட் கூறுகிறார்.

### தூக்கமின்மையும் அல்சைமர்ஸ் நோயும்

வாழ்நாள் முழுவதும் சரியாக உறக்கமில்லாமல் இருப்பதற்கும் அமைலாய்டுகள் அதிக அளவில் உருவாவதற்கும் அல்சைமர்ஸ் நோய் வருவதற்கான வாய்ப்புகளுக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு இருப்பது கண்டறியப்பட்டது. விழிப்பு நிலையில் நம் உடல் பகல் நேரத்தில் உருவாக்கும் லேக்டிக் அமிலம் மற்றும் அல்சைமர்ஸ் நோயாளிகளின் மூளையில் சேகரமாகும் டவ் (tau) புரதங்கள் போன்றவை வெளியேற்றப்படுவதும் நடைபெற இது உதவுகிறது.

இரு துருவ மனநோய், ஸ்கிட்ஸொபெனியா (Schizophrenia) போன்ற மனநலக் கோளாறுகள் நீண்டகால தடைபட்ட தூக்கத்தால் ஏற்படுகின்றன. ஆய்வுக்குட்படுத்தப்பட்டவர்களின் மூளையில் அவர்கள் தூங்கும்போது நடந்த ஆய்வில் செரிப்ரஸ் கூழ்மம் 20 வினாடிகளுக்கு ஒரு முறை நீண்ட தொலைவு பயணம் செய்து மூளையை சுத்தப்படுத்துகிறது. நாம் கண் விழித்தவுடன் இந்நிகழ்வு மறைந்து விடுகிறது.

இந்தத் தூய்மைப்பணி குறைவான வேகத்தில் செல்லும் அலைகள் அதிக அளவில் உருவாகும் விடிகாலை நேரத்தில் அதிக செயல்திறனுடன் நடைபெறுகிறது. கண் இமை அசைவுகள் நிலையாக இருக்கும் நிலை விடிகாலை நேரத்திலேயே ஏற்படுகிறது. இதுவே ஆழ்ந்த தூக்கத்திற்கு உதவும் நிலை. வயதானவர்கள் இந்த நேரத்தில் நல்ல தூக்கம் தடைபட்டு தூக்கம் இல்லாமல் இருப்பது ஏன் என்பது பற்றி இன்னும் தெளிவாகத் தெரியவில்லை. வயதாகும்போது க்லிம்பாட்டிக் செயல்முறையின் திறன் குறைகிறது.

மூளையைச் சுத்தமாக வைத்துக் கொள்ள மட்டும் ஆழ்ந்த உறக்கம் அவசியமானதில்லை. அந்த சமயத்தில் வளர்ச்சி ஹார்மோன்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. நோய் எதிர்ப்பு செல்கள் அப்போது நடைபெறுகின்றன. எலும்புகள், திசுக்கள் பழுது நீக்கப்படுகின்றன. நினைவாற்றலை நிலைப்படுத்தவும் இரத்த குளுக்கோஸை ஒழுங்குபடுத்தவும் நல்ல தூக்கம் உதவுகிறது. வயதானபோதும் நல்ல தூக்கத்தைப் பெற முடியும் என்று கார்டிஃப் (Cardiff) பல்கலைக்கழக உறக்க நிபுணர் பேராசிரியர் பெனேலாபி லூயிஸ் (Prof Penelope Lewis) கூறுகிறார். ஆழ்ந்த தூக்கம் என்பது நியூரான்கள் செயல்திறன் மற்றும் திறனற்ற மின்சாரச்செயல்களில் மாறி மாறி ஈடுபடுவதால் நிகழ்கிறது. இது எலக்ட்ரோஎன்சிஃபாலோக்ராம் (Electroencephalogram EEG) என்ற கருவியில் அலைகள் வடிவில் பதிவு செய்யப்பட்டு ஆராயப்படுகிறது.

### ஆழ்ந்த உறக்கத்தைப் பெற

படுக்கச் செல்வதற்கு முன் காபி, மது பானங்கள் போன்ற பானங்களை அருந்துவது, உடற்பயிற்சி, மின்னணு சாதனங்களின் பயன்பாடு போன்றவற்றை தவிர்த்தல் மற்றும் படுக்கையறையை இருட்டாக வைத்திருப்பதன் மூலம் தூக்கத்தின் தரத்தை மேம்படுத்தலாம். அப்போது வயது வேறுபாடின்றி அனைவரும் நல்ல தூக்கத்தைப் பெற முடியும். சாளரங்கள் வழியாக வெளிச்சம் வந்தாலும், மின்னணுப் பொருட்களின் பைலட் ஒளி வந்தாலும் இவை நம்மை எழுப்பிவிடாது என்றாலும் இவை நம் தொடக்க நிலை தூக்கத்தைப் பாதிக்கும். இதனால் நன்றாகத் தூங்கிய உணர்வு நமக்கு ஏற்படாது.

தூக்கம் என்பது ஒரு செயலற்ற நிலை போலத் தோன்றும் என்றாலும் மனம் விழித்துக்கொண்டுதான் இருக்கிறது. மூளை க்லிம்பாட்டிக் செல்கள் மூளையை தூய்மையாக வைத்துக்கொள்ள உதவுகின்றன. ஆழ்ந்த உறக்கம் மனித வாழ்வில் கிடைப்பதற்கரிய ஒரு வரம் என்றே ஆய்வாளர்கள் கூறுகின்றனர். தூக்கம் பற்றிய இந்த புதிய கண்டுபிடிப்பு நம் அனைவரின் ஆழ்ந்த உறக்கத்திற்கு உதவும் என்று விஞ்ஞானிகள் நம்புகின்றனர். ●

# பா.ஜ.க. செயற்குழுவில் முஸ்லிம்: தேர்தலுக்காக புது வடிவம் எடுக்கிறதா?

அபிஜீத் ஸ்ரீவஸ்தவா



இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி சில தினங்களுக்கு முன், தான் 'மூன்றாவது முறை பிரதமராவது' பற்றி பேசியிருந்தார்.

அதைத் தொடர்ந்து, கடந்த ஞாயிற்றுக்கிழமை பாரதிய ஜனதா கட்சி தனது தேசிய செயற்குழுவை அறிவித்தது. அதில் பல புதிய முகங்கள் இடம் பெற்றிருந்தனர்.

ரமன் சிங் போன்ற முன்னாள் முதல்வர்கள் கட்சியின் அமைப்பில் சேர்க்கப்பட்டுள்ளனர். அதே நேரத்தில் தாரிக் மன்சூர் மற்றும் அப்துல்லா குட்டி ஆகியோர் பாஜகவின் புதிய முஸ்லிம் முகங்களாக பார்க்கப்படுகிறார்கள்.

அடுத்த ஆண்டு நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலையும், இந்த ஆண்டு நடக்க உள்ள நான்கு மாநிலங்களுக்கான சட்டசபை தேர்தல்களையும் மனதில் வைத்தே, பா.ஜ.க.வின் செயற்குழுவில் இந்த மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன என்ற கருத்துகளும் எழுந்துள்ளன.

பா.ஜ.க.வின் சித்தாந்தம் மற்றும் கடந்த ஒன்பது ஆண்டுகால மோடி அரசின் செயல்பாடுகளின் மூலம் தேர்தலில் அதிகபட்ச இடங்களைப் பெற முடியும் என்பதை மனதில் வைத்தே தேசியச் செயற்குழுவில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக பா.ஜ.க மூத்த தலைவர் ஒருவர் கூறுகிறார்.

### 80 இடங்கள் கொண்ட உ.பி.க்கு அதிக முக்கியத்துவம்

நாடாளுமன்றத் தேர்தலில் உத்தரபிரதேசத்துக்கு இருக்கும் 80 தொகுதிகளை வைத்து, பாஜகவின் தேசிய செயற்குழுவில் அம்மாநிலத்துட்க்கு அதிகபட்ச முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. அங்கிருந்து 8 உறுப்பினர்கள் புதிய செயற்குழுவில் இடம்பெற்றுள்ளனர்.

புதிய செயற்குழுவில், மூன்று துணைத் தலைவர்கள், இரண்டு பொதுச் செயலாளர்கள், ஒரு செயலாளர், ஒரு பொருளாளர், ஒரு இணைச் செயலாளர் ஆகியோர் உத்தரபிரதேசத்தைச் சேர்ந்தவர்கள்.

### சட்டமன்றத் தேர்தல் நடக்கவிருக்கும் மாநிலங்கள் மீது அதிக கவனம்

இந்த ஆண்டு தெலங்கானா, ராஜஸ்தான், சத்தீஸ்கர் மற்றும் மத்திய பிரதேசம் ஆகிய நான்கு மாநிலங்களில் சட்டசபை தேர்தல் நடைபெற உள்ளது.

பா.ஜ.க சமீபத்தில் தனது நான்கு மத்திய அமைச்சர்களை இந்த மாநிலங்களில் தேர்தல் பொறுப்பாளராக நியமித்துள்ளது. இப்போது இந்த மாநிலங்களுக்கும் தேசிய செயற்குழுவில் முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது.

சத்தீஸ்கரில் தேசிய துணைத் தலைவர் பதவிக்கு அதிகபட்சமாக மூன்று பிரதிநிதிகள் உள்ளனர். இவர்கள் முன்னாள் முதல்வர் ரமன் சிங், சரோஜ் பாண்டே, மற்றும் லதா உசெந்தி.

மற்ற மூன்று மாநிலங்களிலிருந்தும் தலா ஒரு பிரதி நிதி உள்ளார். ராஜஸ்தானைச் சேர்ந்த முன்னாள் முதல் வர் வசுந்தரா ராஜே, மத்தியப் பிரதேசத்தைச் சேர்ந்த சவுதன் சிங், தெலுங்கானாவைச் சேர்ந்த டி.கே.அருணா ஆகியோர் இந்த அமைப்பில் இடம் பெற்றுள்ளனர்.

அதே நேரத்தில் மத்தியப் பிரதேசத்தைச் சேர்ந்த கைலாஷ் விஜய்வர்கியா, ராஜஸ்தானில் இருந்து சுனில் பன்சால், தெலுங்கானாவில் இருந்து சஞ்சய் பேடி ஆகியோர் தேசிய பொதுச் செயலாளர் பதவிக்கு கொண்டுவரப்பட்டுள்ளனர்.

ராஜஸ்தான் மற்றும் மத்திய பிரதேசத்தில் இருந்து தலா ஒரு முகம் தேசிய செயலாளர்களில் சேர்க்கப்பட்டுள்ளது. அதாவது, புதிய அணியில் உள்ள 38 பேரில் 11 பேர் இந்த நான்கு மாநிலங்களைச் சேர்ந்தவர்கள்.

### புதிய நிர்வாகிகள் யாருடைய அணி?

இப்போது ஒரு முக்கியமான கேள்வி எழுகிறது. இவர் கள் பா.ஜ.க தலைவர் ஜே.பி.நட்டாவின் பரிந்துரையின் பேரில் கட்சியின் செயற்குழுவில் உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டுள்ளார்களா அல்லது பிரதமர் நரேந்திர மோதி மற்றும் உள்துறை அமைச்சர் அமித்ஷா இதில் முக்கிய பங்கு வகிக்கிறார்களா?

மூத்த பத்திரிகையாளர் ராதிகா ராமசேஷன் கூறுகை யில், "இது ஒரு கூட்டுப் பொறுப்பு. பிரதமர் மோதியும், அமித்ஷாவும் வெவ்வேறு மாதிரிச் சிந்திக்கிறார்கள் என்று சொல்வது முற்றிலும் தவறாகிவிடும். இருவரும் நெருக்கமான ஒரு அணியாக வேலை செய்கிறார்கள், ஜே.பி. நட்டா அவர்களின் உத்தரவை ஏற்றுக்கொள்கி றார். எனவே புது அணி மோதி-அமித்ஷா அணி," என்று கூறுகிறார்.

### யார் இந்த தாரிக் மன்சூர்?

இவை அனைத்திற்கும் நடுவே, பா.ஜ.க.வின் தேசியச் செயற்குழுவில் இடம் பெற்றுள்ள முஸ்லிம் முகமான தாரிக் மன்சூரின் பெயர் 'அதிர்ச்சி அலைகளை" ஏற்படுத்தியிருக்கிறது. விவாதமாகவும் மாறியிருக்கிறது.

உத்தரப் பிரதேச சட்ட மேலவை உறுப்பினரான இவர், அலிகர் முஸ்லிம் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர்.



2017-ம் ஆண்டு முதல், புக்கல் நவாப், மொஹ்சின் ராசா, மற்றும் டேனிஷ் ஆசாத் அன்சாரிக்குப் பிறகு கட்சியால் சட்ட மேலவைக்கு அனுப்பப்பட்ட நான்காவது முஸ்லிம் உறுப்பினர் இவர்.

தாரிக் மன்சூர் துணைவேந்தராக இருந்தபோது, குடியுரிமை திருத்தச் சட்டம் மற்றும் தேசிய குடிமக்கள் பதிவேடு ஆகியவற்றுக்கு எதிராக அலிகர் முஸ்லிம் பல்கலைக்கழகத்தில் ஆர்ப்பாட்டங்கள் நடந்தன. அப்போது பல்கலைக்கழக வளாகத்திற்குள் போலீசார் நுழைந்தனர். மன்சூர் மாணவர்களுக்கு ஆதரவாக நிற்கவில்லை என்று விமர்சிக்கப்பட்டார்.



பாரதிய ஜனதா கட்சியை உன்னிப்பாக கவனித்து வரும் மூத்த பத்திரிகையாளர் ராதிகா ராமசேஷன், "தாரிக் மன்சூர், அலிகர் முஸ்லிம் பல்கலைகழகத்தின் துணைவேந்தராக இருந்த போது ஆர்.எஸ்.எஸ் உடன் தொடர்பு வைத்திருந்தார். பிஜேபியால் விரும்பப்பட்டதால் தான் அவர் அந்த அமைப்பில் சேர்க்கப்பட்டுள்ளார்," என்கிறார்.

முக்தார் அன்சாரி மற்றும் ஷாநவாஸ் உசேன் ஆகியோருக்குப் பிறகு பாஜகவுக்கும் ஒரு முஸ்லிம் பிரதிநிதி தேவைப்பட்டது போலத் தெரிகிறது என்கிறார் அவர்.

### இஸ்லாமியர்களை பா.ஜ.க பக்கம் இழுப்பாரா தாரிக் மன்சூர்?

தாரிக் மன்சூர் பஸ்மண்டா முஸ்லிம்கள் மத்தியில் கட்சியின் பிடியை வலுப்படுத்த உதவுவார் எனவும் நம்பப்படுகிறது.

மூத்த பத்திரிகையாளரான பிரமோத் ஜோஷி கூறுகை யில், 'தற்போதைக்கு அவரால் பெரிய அளவிலான முஸ்லிம்களை ஈர்க்க முடியும் என்று தோன்றவில்லை. ஆனால் இது ஒரு தொடக்கம் ," என்கிறார்.

ராதிகா ராமசேஷனும் பிரமோத் ஜோஷியோடு உடன் படுகிறார். "தாரிக் மன்சூரை அமைப்பில் சேர்த்த பிறகு பஸ்மாண்டா முஸ்லிம்கள் பா.ஜ.க பக்கம் வருவார்கள் என்று தோன்றவில்லை," என்கிறார் அவர்.

பா.ஜ.க.வில் துணைத் தலைவர் பதவிக்கு முக்கியத்துவம் இல்லாததால், மன்சூரின் பிரதிநிதித்துவம் வெறும் அடையாளம் மட்டுமே என்று அவர் கூறுகிறார்.

மறுபுறம், மூத்த பத்திரிகையாளர் பிரமோத் ஜோஷி இந்த நியமனங்களில் சமூகத்தில் பா.ஜ.க.வின் பிம்பத்தைக் கட்டமைப்பதன் ஒரு பகுதியாகப் பார்க்கிறார்.

"பா.ஜ.க இதுவரை முஸ்லிம்களை புறக்கணித்து அரசியலில் இயங்கி வந்தது. ஆனால், அவர்களுக்கு எதிரான கூட்டணி வலுவாக இருப்பதால் படிப்படியாக முஸ்லிம்கள் மத்தியிலும் செல்ல வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறது," என்று அவர் கூறுகிறார்.

### கேரளாவின் பக்கம் திரும்பிய பா.ஜ.க.வின் பார்வை



கேரளாவைச் சேர்ந்த அப்துல்லா குட்டிக்கும் பா.ஜ.க நிர்வாகிகளில் இடம் வழங்கப்பட்டுள்ளது.

இது குறித்து பிரமோத் ஜோஷி கூறுகையில், "தேசிய பிம்பத்தை முன்னிறுத்தும் பா.ஜ.க.வின் முயற்சி இது. பா.ஜ.க தெற்கில் புதிய பகுதிகளில் கால்பதிக்க விரும்புகிறது. தமிழகத்தில் 6 மாத பாதயாத்திரையை துவங்கியிருக்கிறது. கேரளா ஒரு புதிய பகுதி. அப்துல்லா குட்டியுடன் ஏ.கே.ஆண்டனியின் மகன் அனில் ஆண்டனியும் தேசிய செயற்குழுவில் சேர்க்கப்பட்டுள்ளார்," என்கிறார்.

ராதிகா ராமசேசன் கூறுகையில், "கேரளாவின் மீது கவனம் செலுத்தவே அவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர், ஆனால் இதுவும் வெறும் அடையாளத்திற்குத் தான்," என்று கூறுகிறார். (10ஆம் பக்கம் பார்க்க)

# பா.ஜ.க. செயற்குழுவில் முஸ்லிம்:...

(09ஆம் பக்கத் தொடர்ச்சி)

பா.ஜ.க.வில் முஸ்லிம்களின் பிரதிநிதியாக முக்தார் அப்பாஸ் நக்வியும் கொண்டு வரப்பட்டார். அவர் உத்தரபிரதேசத்தில் ஷியா வாக்குகளை கொண்டு வருவார் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ராதிகா ராமசேஷன் கூறுகையில், ஒருமுறை நக்வி ராம்பூரிலிருந்து மக்களவைத் தேர்தலில் வெற்றி பெற்றார். ஆனால் விஷ்வ ஹிந்து பரிஷத்தும் அவருக்கு ஆதரவாக அனைத்து இந்து வாக்குகளையும் பெற மிகவும் கடினமாக உழைத்தது, என்கிறார்.

ராதிகா ராமசேஷன் மற்றும் பிரமோத் ஜோஷி இருவரும், பா.ஜ.க. கட்சியில் சிறுபான்மை பிரதிநிதித்துவம் இல்லாததை பூர்த்தி செய்ய முயற்சிப்பதாக நம்புகிறார்கள்.

**பா.ஜ.க.வில் பெண்கள் பங்கேற்பு குறைந்து வருகிறதா?**

பாஜகவின் நிர்வாகக் குழுவில் மொத்தம் 38 பெயர்கள் உள்ளன. இதில் 13 தேசிய துணைத் தலைவர்கள், 8 தேசிய பொதுச் செயலாளர்கள், 13 தேசிய செயலாளர்கள், ஒரு அமைப்பு பொது செயலாளர், ஒரு இணை அமைப்பு பொது செயலாளர், ஒரு பொருளாளர் மற்றும் ஒரு இணை பொருளாளர் ஆகியோர் அடங்குவர்.

தேசியத் தலைவர் ஜே.பி. நட்டாவையும் சேர்த்து, கட்சியின் தேசிய செயற்குழு உறுப்பினர்களின் எண்ணிக்கை 39 ஆக உள்ளது.

இதில் 9 பேர் மட்டுமே பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது. எனவே நிர்வாகத்தில் பெண்களின் பங்களிப்பு 23வீதம் ஆக உள்ளது. தேசியப் பொதுச் செயலாளர்கள் பட்டியலில் ஒரு பெண் கூட இல்லை.

பெண்களுக்கு 33 வீத இட ஒதுக்கீட்டைப் பற்றிப் எப்போதும் பேசி வரும் பாஜகவின் சொந்தக் கொள்கைகளுக்கு இணையாக இந்தத் தரவுகள் இல்லை.

பெண்களுக்கு உரிய பிரதிநிதித்துவம் கொடுக்காததால் பா.ஜ.க.வால் வாக்குறுதியை நிறைவேற்ற முடியவில்லை என்கிறார் ராதிகா ராமசேஷன். முன்னதாக, பல பெண்களும் தங்கள் கட்சியில் சேர்க்கப்பட்டுள்ளனர், ஆனால் அது தொடர்ச்சியாகக் குறைந்து வருகிறது.

எனவே, பா.ஜ.க.வில் தகுதியான பெண்கள் பற்றாக்குறையா அல்லது வரும் காலங்களில் இது தொடர்பாக அமைப்பில் மாற்றம் வருமா?

“பா.ஜ.க.வில் திறமையான பெண்கள் குறைவு என்பது இல்லை. தெற்கில் பா.ஜ.க.வில் கூர்மையாகப் பேசும் பல பெண்கள் இருக்கிறார்கள்,” என்கிறார் ராதிகா ராமசேஷன்.

மேலும் அவர் கூறுகிறார், ‘பெண்கள் அல்லது தலித்துகளின் பங்கேற்பைக் குறைப்பது உத்தியின் ஒரு பகுதியாக இருக்க முடியாது. பெண்களின் பங்கேற்பைக் குறைப்பது குறித்து கண்டிப்பாக விமர்சனங்கள் இருக்கும், எனவே வரும் காலங்களில் இன்னும் சில பெயர்கள் சேர்க்கப்படலாம் என நினைக்கிறேன். பெண்களின் பிரதிநிதித்துவம் தொடர்பாக பா.ஜ.க நிச்சயம் ஏதாவது செய்யும் என்பது உறுதி,” என்கிறார்.

**2024 தேர்தலைச் சமாளிக்குமா இந்த நிர்வாகக் குழு?**

2024 தேர்தலுக்கு இன்னும் கால அவகாசம் இருப்பதால், இக்குழுவில் சில மாற்றங்கள் செய்யப்படுமா?

இந்தக் கேள்விக்கு மூத்தப் பத்திரிக்கையாளர் ராதிகா ராமசேஷன் பதில் கூறும்போது, ‘லோக்சபா தேர்தலுக்கான இறுதி மாற்றம் இதுவல்ல. அதற்கு இன்னும் நிறைய கால அவகாசம் உள்ளது. அதனால் பெண்கள் பிரதிநிதித்துவம் குறைவாக உள்ளதை பா.ஜ.க சரிசெய்யும் என எதிர்பார்க்கலாம்,” என்கிறார்.

மேலும், “இப்படிப்பட்ட மாற்றம் சமுதாயத்திற்கு என்ன செய்தியை அனுப்புகிறது. அதை மனதில் வைத்து பாஜக மாற்றங்களைச் செய்கிறது. அதனால் அதில் தலித்துகள், ஆதிவாசிகள், ஒபிசிகள் ஆகியோரை சேர்க்கலாம்,” என்கிறார்.

பொதுச்செயலாளர் பதவியில் பா.ஜ.க வேறு எந்த நபர்களை சேர்க்கிறது என்பது முக்கியம்.

இதுபற்றி பிரமோத் ஜோஷி கூறும்போது, “பா.ஜ.க துரிதமாக மாறி வருகிறது. இதுபோன்ற சூழ்நிலையில், வரும் நாட்களில் அமைச்சரவையில் சில புதிய முகங்கள் சேர்க்கப்படலாம், அதே நேரத்தில் சில பழைய முகங்களும் கட்சிக்குள் கொண்டு வரப்படலாம்,” என்கிறார்.

# சாய்ந்தமருதில் போதைக்கு எதிராக மாணவர் பேரணி!



அக்கரைப்பற்று, ஓக. 04

கல்முனை கல்வி வலய சாய்ந்தமருது அல்- ஹிலால் வித்தியாலயத்தின் ஏற்பாட்டில் போதைப்பாவனைக்கு எதிரான வீதி ஊர்வலமும், துண்டுப்பிரசுர விநியோகமும் பாடசாலை அதிபர் யூ.எல். நஸார் தலைமையில் நேற்று முன் தினம் சாய்ந்தமருது பிரதான வீதியில் நடைபெற்றது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் ஆலோசனைக்கிணங்க கல்முனை வலயக்கல்வி அலுவலக சிபாரிசின் அடிப்படையில் கல்முனை கல்வி வலய சாய்ந்தமருது அல்- ஹிலால் வித்தியாலயத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த பேரணி பாடசாலை முன்றலில் ஆரம்பித்து சாய்ந்தமருது பொதுச்சந்தை வரை சென்றது.

இந்த பேரணியின்போது போதைப்பொருளினால் ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பிலான துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன.

இந்த பேரணியில் கல்முனை வலயக்கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். சஹுதுல் நஜீம், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம். றிபாஸ், சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக், சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சிரேஷ்ட பொலிஸ் பரிசோதகர் எஸ்.எல். சம்சுதீன், சாய்ந்தமருது கோட்டக்கல்வி அதிகாரியும், உதவிக்கல்வி பணிப்பாளருமான எம்.என்.ஏ.மலீக், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் திட்டமிடல் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.சீ.எம்.மாஹீர், கல்முனை வலயக்கல்வி அலுவலக உதவிக்கல்வி பணிப்பாளர்கள், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை சுகாதார உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (அ)






# பாலியல் துஷ்பிரயோக முயற்சி மாணவன் வைத்தியசாலையில்

## ஆசிரியர் தலைமறைவு

**நிந்தவூர், ஓக. 04**

**பாடசாலை ஒன்றில் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளான மாணவன் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் ஆசிரியர் தலைமறைவாகியுள்ளார்.**

அம்பாறை மாவட்டம் நிந்தவூர் பகுதியில் உள்ள பிரபல அரச பாடசாலை ஒன்றில் கடந்த ஜூலை மாதம் 19 ஆம் திகதி உடற்கல்வி ஆசிரியரால் விளையாட்டு அறையில் வைத்து பாலியல் ரீதியாக மாணவன் துஷ்பிரயோக முயற்சிக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக அதிபரிடம் முறையிடப்பட்டிருந்தது.

சம்பவம் இடம்பெற்று மறுநாள் பாதிக்கப்பட்ட குறித்த மாணவன் அதிபரிடம் முறையிட்டுள்ளதுடன் இதுவரை இரு வாரங்கள் கழிந்தும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படாமல் மூடி மறைப்பதற்கான முழு முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதனை அடுத்து இச் சம்பவம் குறித்து நிந்தவூர் பொலிஸார் குறித்த சம்பவத்தில் பாதிக்கப்பட்டுள்ள தனது மகனான தரம் 9 வகுப்பில் கல்வி கற்கின்ற குறித்த மாணவனிடம் வாக்குமூலம் ஒன்றை இரு தடவை பெற்றுச் சென்றுள்ளதுடன் மாணவனை துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்த முயற்சி செய்ததாக கூறப்படும் சந்தேக நபரான ஆசிரியர் தொடர்ந்தும் தலைமறைவாகி உள்ளதாக தாயார் குறிப்பிட்டார்.

இந்நிலையில் பாலியல் துஷ்பிரயோக முயற்சிக்கு உட்படுத்தப்பட்டதாக குறிப்பிடப்படும் தனது மகன் புதன்கிழமை மாலை கல்முனை அஷ்ரப் ஞாபக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் குறித்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் வாக்குமூலங்களை பெற்றுச்சென்றுள்ளதாக குறிப்பிட்டார்.

இந்த விடயம் தொடர்பில் எந்த தரப்பினரும் எமக்கு உதவவில்லை என கண்ணீர் மல்க பாதிக்கப்பட்ட மாணவனின் தாயார் ஊடகங்களிடம் தெரிவித்தார். (அ)

# சிறப்பாக நடந்த உகந்தைமலை முருகன் ஆலயத் தீர்த்தோற்சவம்



காரைதீவு, ஓக. 04

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற உகந்தை மலை முருகன் ஆலய வருடாந்த ஆடி வேல் விழா உற்சவத்தின் தீர்த்தோற்சவம் நேற்று முன் தினம் புதன்கிழமை சிறப்பாக நடைபெற்றது.

காலை 10.30 மணியளவில் வசந்த மண்டப சிறப்பு பூசையையடுத்து ஆலய வண்ணக்கர் டி.எம்.சுதுநிலமே திசாநாயக்க முன்னிலையில் சுமார் ஆயிரம் அடியார்களின் அரோகரா கோசம் விண்ணைப் பிளக்க சரியாக 11.48 மணியளவில் சமுத்திர தீர்த்தம் இடம்பெற்றது.

ஆலய பிரதம குரு சிவஸ்ரீ க.கு.சீதாராம் குருக்கள் தலைமையில் தீர்த்தோற்சவம் சிறப்பாக நடைபெற்றது. (அ)

# சாதனை படைத்த மாணவர்களை கௌரவித்த அல் அஸ்றப் மகா வித்தியாலய கல்வி சமூகம்!



அக்கரைப்பற்று, ஓக. 04

வலய மட்ட போட்டியில் திறமையை வெளிப்படுத்தி கிழக்கு மாகாண மட்ட விளையாட்டுப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்ட மாவடிப்பள்ளி அல் அஸ்றப் மகா வித்தியாலய மாணவர்களுக்கான கௌரவிப்பும்,பதக்கம் அணிவிக்கும் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை பாடசாலை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

பாடசாலை அதிபர் வீ.எம். ஸம் ஸம் தலைமையில் இடம்பெற்ற இந்நிழ்வில் கல்முனை கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் யூ.எல்.எம். சாஜித் பிரதம அதிதியாகவும், காரைதீவு கோட்டக் கல்விப் பணிப்பாளர் கே.டேவிட் கௌரவ அதிதியாகவும், ஓய்வு நிலை உடற்கல்வித்துறை ஆசிரிய ஆலோசகர் முஹம்மட் இப்றாஹிம் விசேட அதிதியாகவும், குடியுரிமைக் கல்வி ஆசிரிய ஆலோசகர் திருமதி டேவிட், பிரதி அதிபர், உதவி அதிபர், பகுதித்தலைவர்கள் அதிதிகளாகவும் மற்றும் ஆசிரியர்களும் மாணவர்களும் கலந்து சிறப்பித்தனர். (அ)

# அகில இலங்கை தமிழ்மொழித்தின நிகழ்வு சம்மாந்துறை வலயத்தில்

காரைதீவு, ஓக. 04

அகில இலங்கை தமிழ் மொழித்தின சம்மாந்துறை வலய மட்ட தமிழ் மொழித்தின நிகழ்வு சம்மாந்துறை அல்மர் ஜான் உயர்தரப் பாடசாலையில் மிகவும் சிறப்பாக நடந்தேறியது.

தமிழ்ப் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் எம்.ரி.எம்.ஜனோபர் தலைமையில் ஆரம்ப விழா நடந்தேறியது.

சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் டாக்டர் உமர் மௌலானா பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்தார்.கௌரவ அதிதியாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஏஎல்.அப்துல் மஜீட் மற்றும் சிறப்பதிதியாக உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா கலந்து சிறப்பித்தனர்.

பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், வளவாளர்கள், அதிபர்கள், மாணவர்கள் உட்பட பல்துறை சார் நடுவர்களும் நிகழ்வில் பங்கேற்றனர்.

பல்சமய அனுஷ்டான மேடையேற்றலுடன் கோரக்கர் தமிழ் வித்தியாலய மாணவிகளின் நடனங்களும் அரங்கை சிறப்பித்தன.



ஐம்பது போட்டிகளில் முதலிடத்தை சம்மாந்துறை கோட்டமும் இரண்டாம் இடத்தை நாவிதன்வெளி கோட்டமும் மூன்றாம் இடத்தை இறக்காமம் கோட்டமும் பெற்றுக் கொண்டு மாவட்ட மட்ட போட்டிக்கு தெரிவாகின. (அ)

# றிதிதென்னை வீதியில் கனரக வாகன போக்குவரத்தை தடுத்து நிறுத்துங்கள்!

## அப்பகுதி மக்கள் கவனயீர்ப்பு போராட்டம்!

மட்டக்களப்பு, ஓக. 04

வாகரை றிதிதென்னை புதிய கிராம மக்கள் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். தங்களது பிரதேசத்தின் வீதியூடாக மண் கொண்டு செல்லும் கனரக வாகனங்களை நிறுத்தித் தருமாறிக் கோரியும் கடந்த சனிக்கிழமையன்று 6 வயது சிறுவன் ஒருவர் தண்ணீர் பவுசரினால் விபத்திற்குள்ளாகி உயிரிழந்தமையைக் கண்டித்தும் இவ் கவனயீர்ப்பு போராட்டம் பிரதேச மக்களினால் மேற்கொள்ளப்பட்டது.

இவ் போராட்டத்தில் ஓமடியாமடு,றிதிதென்னை ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் ஈடுபட்டனர்.

ஓமடியாமடு-றிதிதென்னை பிராதன வீதியில் போக்குவரத்தில் ஈடுபடும் மண் கொண்டு செல்லும் கனரக வாகனங்களினால் பாடசாலை மாணவர் முதல் ஏனைய பொதுமக்கள் வரை தங்களது பயணத்தைப் பாதுகாப்பாக மேற்கொள்ள முடியாத நிலை காணப்படுவதாகவும்-

வாகனங்களினால் ஏற்படுத்தப்படும் புழுதி,வாகன சத்தம் மற்றும் வேகம் என்பன தங்களது அன்றாட வாழக்கையில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும்-

வீதி விபத்துக்கள் இடம்பெற்று பொதுமக்கள் உயிரிழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே இவ் வீதியில் மேற்குறித்த வாகனங்கள் போக்குவரத்தில் ஈடுபடுவதனை தடுத்து தருமாறும் அவற்றினை வேறு வழியில் செல்ல அனுமதிக்குமாறு கோரி மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டோர் கோஷங்களை எழுப்பியதுடன் கையில் பதாதைகளை ஏந்தியிருந்தனர். (அ)



# தானியக் களஞ்சியம் தாக்குதலில் அழிவு!

## மொஸ்கோ நகரில் வானளாவிய கட்டடம் ட்ரோன் மோதிச் சேதம்!





**கீவ், ஓக. 04**

**உக்ரைன் கடந்தசில நாட்களாக ரஷ்யாவின் எல்லைக்குள் தாக்குதல்களை அதிகரித்துள்ளது. ஆட்களின்றிப் பறந்து சென்று மோதி வெடிக்கின்ற ட்ரோன்கள் பல மொஸ்கோ உட்பட ரஷ்ய நகரங்கள் மீது சுடப்பட்டுள்ளன. இதனால் ரஷ்யாவின் வான் பாதுகாப்புக் கவசங்கள் பெரும் பலப்பரீட்சையைச் சந்தித்துள்ளன.**

பதிலுக்கு ரஷ்யா உக்ரைனின் சிவில் கட்டமைப்புகள் மீதான ஏவுகணைத் தாக்குதல்களைத் தீவிரப்படுத்தி உள்ளது. இதனால் சிவிலியன் உயிரிழப்புகள் அதிகரிக்கத் தொடங்கியுள்ளன. இரு தரப்புகளும் ட்ரோன்களைக் கண்டபடி தாக்குதலுக்குப் பயன்படுத்துவது பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தலாம் என்று அவதானிகள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

ரஷ்யத் தலைநகர் மொஸ்கோவின் முக்கிய வர்த்தக வட்டகையில் அமைந்துள்ள வானளாவிய கட்டடம் ஒன்று அடுத்தடுத்து ட்ரோன் தாக்குதலுக்கு இலக்காகி உள்ளது.

அமைச்சு அலுவலகங்கள் உட்பட பல பணிமனைகள் இயங்குகின்ற உயர்ந்த கட்டடம் கடந்த ஞாயிறன்றும் பின்னர் நேற்று முன்தினம் திங்கள் இரவுப் பொழுதிலும் இரண்டு தடவைகள வெடிக்கும் ட்ரோன் தாக்குதலுக்கு

இலக்கானது. இதனால் நகர வாசிகள் பெரும் பீதிக்குள்ளாகினர் என்று செய்திகள் தெரிவிக்கின்றன. எவருக்கும் காயம் ஏற்படவில்லை. கட்டடம் சிறியளவில் சேதமடைந்தது.

மொஸ்கோவில் **"Moskva City complex"** இல் அமைந்துள்ள **"IQ-Quarter - 1"** கட்டடம் இரண்டாவது தடவையாகவும் தாக்கப்பட்டதை நகர மேயர் செர்ஜி சோபியானின் **(Sergei Sobyanin)** உறுதிப்படுத்தினார்.

இரவு நேரம் பாரிய சத்தம் கேட்டு நகர வாசிகள் திடுக்குற்றுக் கண் விழித்து கட்டடம் இடிந்து வீழ்வதாக எண்ணிப் பதற்றமடைந்தனர் என்று செய்தி ஊடகங்களுடன் பேசிய சிலர் தங்கள் அனுபவத்தைக் கூறியிருக்கின்றனர்.

ட்ரோன்கள் வெடித்ததை அடுத்து மொஸ்கோ விமான நிலையத்தை நோக்கி வந்து கொண்டிருந்த சில விமானங்கள் வேறு இடங்களுக்குத் திசைதிருப்பப்பட்டன என்றும் தகவல் வெளியானது.

அதேசமயம், ரஷ்யாவின் கட்டுப்பாட்டில் உள்ள கிறீமியா தீவு மீதும், கருங்கடலில் அமைந்துள்ள ரஷ்யக் கடற்படைத் தளம் மீதும் சமகாலத்தில் மேலும் பல ட்ரோன் தாக்குதல்கள் நடத்தப்பட்டிருக்கின்றன.

ரஷ்யாவின் நிலப்பரப்பினுள் நடத்தப்படுகின்ற ட்ரோன் தாக்குதல்களுக்கு உக்ரைன் இதுவரை உரிமை கோரியது கிடையாது. ஆனால் இந்தமுறை மொஸ்கோ கட்டடம் மீது நடத்தப்பட்டிருக்கின்ற தாக்குதலைத் தாங்களே நடத்தியதாக ஏற்றுக் கொள்ளும் விதமாக அதிபர் ஷெலென்ஸ்கி கருத்து வெளியிட்டிருக்கிறார். "போர் மெல்ல மெல்ல ரஷ்யாவுக்குள் திரும்புகிறது" என்று அவர் சூசகமாகக் கூறியிருக்கிறார்.

### தானியக் களஞ்சியம் தாக்கப்பட்டதற்கு கண்டனம்!

உக்ரைனில் டான்யூப் என்ற இடத்தில் அமைந்துள்ள பாரிய தானியக் களஞ்சியம் மீது நேற்றுப் புதன்கிழமை ட்ரோன் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. சீனா, இஸ்ரேல் மற்றும் ஆபிரிக்க நாடுகளுக்கு அனுப்புவதற்காக களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த சுமார் 40 ஆயிரம் தொன்கள்

தானியம் இத்தாக்குதலில் அழிவுக்குள்ளானதாக உக்ரைன் ராணுவம் தெரிவித்துள்ளது.

ரஷ்யாவின் இந்தத் தாக்குதலைக் கண்டித்துள்ள பிரான்ஸ், மொஸ்கோ வேண்டும் என்றே தானிய ஏற்றுமதி நிலைகளைத் தாக்கிச் சேதப்படுத்தி உலகில் தானியத் தட்டுப்பாட்டை ஏற்படுத்த முயற்சிப்பதாகப் பாரிஸ் குற்றம் சுமத்தியுள்ளது.

உக்ரைனுடனான கருங்கடல் தானிய ஏற்றுமதி தொடர்பான சர்வதேச உடன்படிக்கையில் இருந்து மொஸ்கோ கடந்த சில நாட்களுக்கு முன்னர் விலகியிருந்தது. (அ)



# நைகரிலிருந்து 260 பிரஜைகளுடன் முதல் விமானம் பாரிஸ் வந்தடைவு

## தலைநகர் நியாமேயில் ரஷ்ய ஆதரவுக் கோஷம்

*நியாமே, ஓக. 04*

263 பேருடன் நைகர் தலைநகரில் இருந்து கிளம்பிய முதலாவது பிரெஞ்சு விமானம் பாரிஸ் வந்தடைந்தது. ஒரு டசினுக்கு மேற்பட்ட குழந்தைகள் உட்பட்ட அந்தக் குழுவினரை ஏற்றிவந்த 'எயார்பஸ்' எ330 விமானம் பாரிஸ் சார்ள் - து- ஹோல் விமான நிலையத்தில் நேற்று முன் தினம் இரவு தரையிறங்கியது. மேலும் இரண்டு விமானங்கள் நேற்று காலை

அங்கிருந்து பிரெஞ்சுப் பிரஜைகள் உட்பட வெளிநாட்டவர்களை ஏற்றிக் கொண்டு பாரிஸ் திரும்பும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

நேற்று முன் தினம் இரவு வந்தடைந்தோரில் பிரெஞ்சுப் பிரஜைகள் உட்பட நைகர், போர்த்துக்கல், லெபனான், பெல்ஜியம், எத்தியோப்பிய போன்ற நாடுகளின் குடிமக்களும் அடங்குவர்.

நைகர் தலைநகரில் உள்ள விமான நிலையத்துக்கு வந்தவர்களை விமானத்தில் ஏற்றி அனுப்புவதற்காகப் பிரெஞ்சுப் படைவீரர்கள் 50 பேர் அங்கு நிலைகொண்டிருந்தனர். துணிச்சலும் பொறுப்பும் மிக்க அந்தப் பணியில் ஈடுபட்ட அவர்களை பாதுகாப்பு அமைச்சர் பாராட்டியுள்ளார்.

மேற்கு ஆபிரிக்க நாடாகிய நைகரில் தேர்தல் மூலம் மக்களால் தெரிவு செய்யப்பட்ட அதிபர் மொஹமட் பாஸூமை பதவியில் இருந்து கவிழ்த்த ராணுவச் சதிப் புரட்சி இடம்பெற்று ஒரு வாரம் கடந்துள்ள நிலையில் பிரான்ஸின் வெளிவிவகார அமைச்சு அங்குள்ள தனது பிரஜைகளை வெளியேற்றுகின்ற பணியை ஆரம்பித்துள்ளது. அங்குள்ள சில ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த குடிமக்களையும் பிரான்ஸ் தனது விமானம் மூலம் வெளியேற்றுகின்றது.

சுமார் அறுநூறு பிரெஞ்சுப் பிரஜைகள் அங்கு தங்கியிருப்பதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. அதேவேளை அங்குள்ள அமெரிக்கப்பிரஜைகள் சிலரையும் அங்கிருந்து அழைத்து வருமாறு வோஷிங்டன் பிரான்ஸிடம் கேட்டிருக்கிறது. அதேசமயம் அங்குள்ள சுமார் நூறு ஜேர்மனியர்களையும் வெளியேறுமாறு பேர்ளின் கேட்டிருக்கிறது.

நைகருடன் பாரிஸின் ராஜீக உறவுகள் துண்டிக்கப்பட்டு விட்ட நிலையிலும் நியாமேயில் உள்ள பிரான்ஸ் நாட்டின் தூதரகம் இன்னமும் திறந்தே உள்ளது.

சில தினங்களுக்கு முன்பு அதன் முன்பாகத் திரண்டு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டோர் தூதரகத்தைத் தாக்கிச் சேதப்படுத்தியிருந்தனர். ஆர்ப்பாட்டக்காரர்கள் ரஷ்யாவுக்கு ஆதரவான கோஷங்களை எழுப்பியுள்ளனர். "எங்களுக்கு ரஷ்யா வேண்டும்" என்ற பதாகைகள் அவர்கள் மத்தியில் காணப்பட்டன.

நைகர் சதிப் புரட்சிக்குப் பின்னால் ரஷ்யா உள்ளது என்ற சந்தேகத்தை இந்தக் கோஷங்கள் கிளப்பியுள்ளன.

ஆயினும் அவ்வாறான தகவல்களை அமெரிக்கா மறுத்துள்ளது.

ஆபிரிக்காவில் நீண்டகாலம் பிரான்ஸ் உட்பட மேற்குலகின் செல்வாக்கில் இருந்துவந்த நாடுகளில் ரஷ்யாவும் அதன் வாக்னர் துணைப் படையும் நிலைகொள்ள ஆரம்பித்துள்ளன.

பதவி கவிழ்க்கப்பட்டுள்ள நைகர் அதிபர் மொஹமட் பாஸூம் ஆபிரிக்காவில் மேற்குலகின் ஆதரவாளராக விளங்கிய கடைசித் தலைவர் ஆவார். பிரான்ஸ் தனது ராணுவ நடவடிக்கைகளுக்கும் யுரேனியத் தேவைக்கும் கடந்த அரை நூற்றாண்டுக்கு மேலாக நைகர் நாட்டைத் தளமாகப் பயன்படுத்தி வந்தது. (அ)

# அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் மற்றுமொரு இந்தியர்

*நியூயோர்க், ஓக. 04*

அமெரிக்காவில் அடுத்த வருடம் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் இந்திய வம்சாவளியினர் போட்டியிடவுள்ளனர்.

தற்போது அமெரிக்காவின் ஜனாதிபதியாக உள்ள ஜோ பைடனின் பதவிக்காலம் அடுத்த வருடத்துடன் முடிவடையவுள்ளது.

அதற்கமைய, அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் அடுத்தவ



ருடம் நவம்பர் மாதம் நடைபெறவுள்ளது.

தற்போது, தேர்தலுக்கான முதற்கட்ட வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

குடியரசு மற்றும் ஜனநாயக கட்சிகள் சார்பில் வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டு வருகின்றனர்.

அதன்படி, ஆளும் கட்சியான ஜனநாயக கட்சி சார்பில் ஜனாதிபதி வேட்பாளராக தற்போதைய ஜனாதிபதி ஜோ பைடன், ராபர்ட் கென்னடி, மரியன்னா வில்லியம்சன் ஆகியோர் போட்டியிட உள்ளனர்.

குடியரசு கட்சி சார்பில் பர்கம், கிறிஸ்டி, விவேக் ராமசாமி, டிசாண்டிஸ், நிக்கி ஹாலே, முன்னாள் ஜனாதிபதியான டொனாட் டிரம்ப் உட்பட 13 பேர் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிட உள்ளனர்.

இப்பட்டியலில், குடியரசு கட்சி சார்பில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ஹிர்ஷ் வர்தன் சிங்கும் போட்டியிட உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஏற்கெனவே இந்திய வம்சாவளியைச் சேர்ந்த விவேக் ராமசாமி, நிக்கி ஹாலே ஆகியோர் ஜனாதிபதி தேர்தலுக்குப் போட்டியிடும் நிலையில் தற்போது அந்தப் பட்டியலில் மூன்றாவது இந்தியராக ஹிர்ஷ் வர்தன் சிங்கும் இணைந்துள்ளார். (அ)




# மேற்கிந்தியாவுடனான ஒருநாள் தொடரை கைப்பற்றியது இந்தியா!

ஜமைக்கா, ஒக. 04

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான கடைசி ஒருநாள் போட்டியில் வென்றது. இதன் மூலம் ஒருநாள் தொடரையும் இந்திய அணி கைப்பற்றியது.

கடைசி ஒருநாள் போட்டியிலும் ரோஹித் சர்மா, விராட் கோலி இல்லாமல் ஹார்திக் பாண்டியா தலைமையில் இந்திய அணி களமிறங்கியது.

நாணயச் சுழற்சியில் மேற்கிந்தியத் தீவுகள் பந்துவீசத் தீர்மானித்தது. இந்தியாவின் துடுப்பாட்டத்தில் இஷான் கிஷன் - ஷுப்மன் கில் இணைப்பாட்டத்தில் முதல் விக்கெட்டுக்கு அதிரடியாக 143 ஓட்டங்கள் சேர்த்தது.

தொடர்ந்து அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்திய இந்திய அணி 50 ஓவர்களில் 5 விக்கெட்களை இழந்து 351 ஓட்டங்கள் குவித்தது.

அதிகபட்சமாக கில் 85, கிஷன் 77, ஹார்திக் 70, சஞ்சு சாம்சன் 51 ஓட்டங்கள் எடுத்தனர். கடின இலக்கை விரட்டிய மேற்கிந்தியத் தீவுகள் அணியின் தொடக்க வீரர்கள் முகேஷ் குமாரின் அடுத்தடுத்த ஓவர்களில் ஆட்டமிழந்தனர். 35.3 ஓவர்களிலேயே 151 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்களையும் இழந்து மே.தீவுகள் அணி தோல்வி அடைந்தது.

அதிகபட்சமாக குடாகேஷ் மோடி 39 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார். இந்திய அணியின் ஷர்துல் தாகூர் 4, முகேஷ் குமார் 3 விக்கெட்களை வீழ்த்தினர்.

ஏற்கெனவே டெஸ்ட் தொடரை இந்திய அணி கைப்பற்றிய நிலையில், இந்த வெற்றியின் மூலம் ஒரு நாள் தொடரையும் 2-1 என்ற கணக்கில் வென்றது. (ஐ)

# எல். பி. எல். தொடர் காலி அணி வெற்றி!



கொழும்பு, ஒக. 04

எல். பி. எல். தொடரில் காலி ரைட்டன்ஸ் பி -லவ் கண்டி அணியை 83 ஓட்டங்களால் வெற்றி கொண்டது.

முன்னதாக நாணயச் சுழற்சியில் வென்ற காலி அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

அந்த அணிக்காக ரிம் செய்பேர்ட் 74, சகீப் அல் ஹசன் 30, செவன் டானியல் 24 என ஓட்டங்களை சேர்த்தனர். இதனால், 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்களை இழந்து 180 ஓட்டங்களை காலி ரைட்டன்ஸ் பெற்றது.

கண்டி அணியின் பந்து வீச்சில் அமர் ஜமால், முஹமட் ஹஸ்னைன், வனிந்து ஹசரங்க ஆகியோர் ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கண்டி 17.1 ஓவர்களில் 97 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது. அந்த அணியின் சார்பில் அசன் பண்டார 27, இசுறு உதான 16, தனுக டபரே 12 ஆகியோரே அதிகபட்ச ஓட்டங்களை எடுத்தனர்.

காலி அணியின் பந்துவீச்சில் கசூன் ராஜித, ரிசாட் என்கிராவ, சம்சி, சகீப் அல் ஹசன் ஆகியோர் தலா 2 விக்கெட்களை கைப்பற்றினர்.

போட்டியின் நாயகனாக ரிம் செய்பேர்ட் தெரிவானார்.

## மகளிர் உலகக் கிண்ணம்:

# இத்தாலி, பிரேஸில் அணிகள் முதல் சுற்றுடன் வெளியேறின



வெலிங்டன், ஒக. 04

மகளிர் உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் முன்னணி அணிகளான இத்தாலி, பிரேஸில் அதிர்ச்சி அளிக்கும் வகையில் அடுத்த சுற்றுக்கு தகுதி பெறத் தவறின. மறுபுறம், தென்னாபிரிக்கா, ஜமைக்கா போன்ற தரவரிசையில் பின்தங்கிய அணிகள் அந்த சுற்றுக்கு முன்னேறி ஆச்சரியமளித்துள்ளன.

நியூசிலாந்தின் வெலிங்டன் நகரில் புதன்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் உலகின் 54ஆம் நிலை அணி யான தென்னாபிரிக்கா 3-2 கோல் கணக்கில் 16ஆம் நிலை அணியான இத்தாலியை சாய்த்தது. போட்டியில் தென்னா பிரிக்காவுக்காக ஹில்தா மகாயா (67’), தெம்பி கட்லானா (90+2’) கோலடிக்க, தவறுதலாக இத்தாலி வீராங்கனை பெனெடெட்டா ஆர்சி ‘ஒன் கோல்’ (32’) அடித்தார். இத்தாலி அணிக்காக அரியானா கருசோ (11’, 74’) கோல்கள் போட்டார்.

இந்த குழுவிலிருந்து இத்தாலி, ஆர்ஜென்ரீனா வெளியேற, சுவீடன், தென்னாபிரிக்கா அடுத்த சுற்றுக்கு முன் னேறியது. அந்த சுற்றுக்கு முன்னேறிய 3ஆவது ஆபி ரிக்க நாடானது தென்னாபிரிக்கா (நைஜீரியா, கமரூனுக்குப் பிறகு).

மற்றோர் ஆட்டத்தில் சுவீடன் 2-0 கோல் கணக்கில் ஆர்ஜென்ரீனாவை வீழ்த்தியது. அந்த அணிக்காக ரெபெக்கா புளோம்குவிஸ்ட் (66’), எலின் ரூபென்சன் (90’) ஆகியோர் கோல் அடித்தனர். இத்துடன், உலகக் கிண்ணப் போட்டியில் அதிக ஆட்டங்களில் வெற்றி காணாத (12 - 3 சமன்/9 தோல்வி) ஒரே அணி என்ற பெயர் பெற்றது ஆர்ஜென்ரீனா.

அவுஸ்திரேலியாவின் மெல்பர்ன் நகரில் உலகின் 43ஆம் நிலை அணியான ஜமைக்காவும், 8ஆம் நிலை அணியான பிரேஸிலும் மோதிய ஆட்டம் கோலின்றி சமநிலையில் முடிந்தது. 1 வெற்றி, 1 சமநிலையுடன் இருந்த பிரேஸில், இந்த ஆட்டத்தில் வென்றால் மட்டுமே அடுத்த சுற்றுக்கு முன்னேற முடியும் என்ற நிலையில் அதற்கு வாய்ப்பு வழங்காமல் போட்டியை சமன் செய்தது ஜமைக்கா. ஆனால், 1 வெற்றி, 2 சமநிலையுடன் ஜமைக்கா முதல் முறையாக உலகக் கிண்ணத்தின் அடுத்த சுற்றுக்கு தகுதிபெற்றது. இந்த குழுவிலிருந்து பிரான்ஸ், ஜமைக்கா முன்னேற, பிரேஸில், பனாமா வெளியேறின.

## உலகக் கிண்ணத் தொடர்:

# பாக். - இந்தியா போட்டி திகதி மாற்றப்படுகிறது



புதுடில்லி, ஒக. 04

உலகக் கிண்ணத் தொடரில் இந்தியா - பாகிஸ்தான் அணிகள் மோதும் போட்டிக்கான திகதி மாற்றம் செய்யப்படவுள்ளது.

ஒருநாள் உலகக் கிண்ணத் தொடர் வரும் ஒக்ரோபர் 5 முதல் நவம்பர் 19ஆம் திகதி வரை இந்தியாவில் நடைபெறவுள்ளது. இந்த தொடருக்கான அட்டவணையை ஐ. சி. சி. சமீபத்தில் வெளியிட்டிருந்தது.

இந்த தொடரின் முக்கிய போட்டியாக கருதப்படும் இந்தியா - பாகிஸ்தான் மோதும் போட்டி ஒக்ரோபர் 15ஆம் திகதி அஹமதாபாத்தில் உள்ள நரேந்திர மோடி மைதானத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால், அன்றைய தினம் நவராத்திரி பண்டிகை கொண்டாடப்படுவதால் பாதுகாப்பு வழங்குவதில் பிரச்னை உள்ளதாக மாநில பொலிஸார் தெரிவித்தனர் என்று கூறப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து, இந்தியா - பாகிஸ்தான் மோதும் போட்டிகள் ஒரு நாள் முன்னதாக ஒக்ரோபர் 14-ஆம் திகதி நடத்துவதற்கு ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

இதுகுறித்து கடிதம் ஒன்றையும் பாகிஸ்தான் கிரிக்கெட் சபைக்கு இந்திய கிரிக்கெட் சபை அனுப்பி வைத்துள்ளது.

இந்நிலையில், போட்டியின் திகதியை மாற்ற பி. சி. சி. ஐ. விடுத்த கோரிக்கையை பாகிஸ்தான் கிரிக்கெட் சபை ஏற்றுள்ளது.

இந்தியா - பாகிஸ்தான் போட்டிகள் ஒக்ரோபர் 14ஆம் திகதிக்கு மாற்றம் செய்யப்படும் நிலையில், ஹைதராபாத்தில் ஒக்ரோபர் 12-ஆம் திகதி பாகிஸ்தான் - இலங்கை அணிகள் மோதும் போட்டியும் மாற்றப்படவுள்ளது.

இந்த வார இறுதிக்குள் திருத்தப்பட்ட புதிய அட்டவணையை ஐ. சி. சி. வெளியிடவுள்ளது. (ஐ)

# டெஸ்ட் புள்ளிகளை இழந்தன இங்கிலாந்து, ஆஸி. அணிகள்!

லண்டன், ஒக. 04

அண்மையில் முடிவடைந்த ஆஷஷ் தொடரில் அவுஸ்திரேலியா, இங்கிலாந்து ஆகிய அணிகள் தலா 2 வெற்றிகளைப் பெற்றன. இதனால், அத்தொடர் சமநிலையில் முடிந்தது.

இந்நிலையில், ஆஷஷ் தொடரில் மெதுவாக பந்து வீசியதாக அவுஸ்திரேலியா மற்றும் இங்கிலாந்துக்கு அபராத தொகை மற்றும் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் போட்டிக்கான அபராதப் புள்ளிகளை ஐ. சி. சி. விதித்துள்ளது.

இந்தத் தொடரில் இங்கிலாந்து அணி தாமதமாக பந்து வீசியதால் ஐ. சி. சி. நடவடிக்கை எடுத்துள்ளது. முதல் டெஸ்டில் 2 ஓவர்களையும் இரண்டாவது டெஸ்டில் 9 ஓவர்களையும் மூன்றாவது டெஸ்டில் 3 ஓவர்களையும் ஐந்தாவது டெஸ்டில் 5 ஓவர்களையும் இங்கிலாந்து குறைவாக வீசியது.

இதற்காக ஓர் ஓவருக்கு ஓர் அபராதப் புள்ளி வீதம் அந்த அணிக்கு 19 அபராத புள்ளிகள் விதிக்கப்பட்டுள்ளன. ஆஷஷ் தொடரில் 2 வெற்றி, ஒரு சமநிலை என மொத்தம் 28 புள்ளிகளை இங்கிலாந்து பெற்றது. 19 அபராதப் புள்ளிகள் விதிக்கப்பட்டதால் வெறும் 9 புள்ளிகளை மட்டுமே பெற்ற இங்கிலாந்து அணி புள்ளிகள் பட்டியலில் 5ஆம் இடத்துக்கு இறங்கியது.

இதேபோல், 4ஆவது டெஸ்டில் அவுஸ்திரேலியா அணியும் ஓவர்கள் வீச அதிக நேரம் எடுத்துக்கொண்டது. 10 ஓவர்கள் குறைவாக வீசியதால் அந்த அணிக்கு 10 அபராத புள்ளிகள் விதிக்கப்பட்டுள்ளன. ஆஷஷ் தொடரில் அவுஸ்திரேலியா பெற்ற புள்ளிகளின் எண்ணிக்கை 18 ஆக குறைந்தது. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் புள்ளிப்பட்டியலில் அவுஸ்திரேலியா 3ஆவது இடத்தில் உள்ளது.

# மக்கள் விரோத செயலில் தொடர்ந்து ஈடுபடும் அரசு

## சஜித் பிரேமதாஸ சீற்றம்

கொழும்பு, ஓக. 04

**“அரசு எப்போதும் மக்களுக்குச் சார்பான செயற்பாடுகளையேயன்றி மக்களுக்கு விரோதமான செயற்பாடுகளையே செய்து வருகின்றது. அதன் விளைவுகள் அரசுக்குப் பேரிடியாக விழும் நாள் வெகுதொலைவில் இல்லை” - என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**



அவர் மேலும் கூறுகையில்-

குளிரூட்டி அறைகளில் இருந்து அரசு எடுக்கும் தன்னிச்சையான முடிவுகளால் பாரிய அனர்த்தம் ஏற்படுவதைத் தடுக்க முடியாதுபோகும்.

உரத்தடைக்கு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எடுத்த தன்னிச்சையான முடிவுகளை அரசு நினைவுகூர வேண்டுமென நினைவூட்டுகின்றோம்.

நாடு மிக மோசமான நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் இவ்வேளையில், நாடு முழுவதும் சோறு போடும் விவசாயிகளின் வாழ்வோடு விளையாடுவதால் ஏற்படும் விளைவுகளை அரசு மட்டுமல்லாது நாடு முழுதும் அனுபவிக்க நேரிடும்.

இது நாட்டின் விவசாயத்தை முடக்குவதற்கு எடுக்கும் அரசின் நுட்பமான மற்றும் தந்திரமான முயற்சியா எனவும் சந்தேகிக்க வேண்டியுள்ளது.

விவசாயிகளை மேலும் ஏமாற்றாமல் அவர்களின் விவசாய நடவடிக்கைகளுக்குத் தேவையான தண்ணீரை அரசு திறந்துவிட வேண்டும் என வலியுறுத்துகின்றோம்-என்றார்.

# கண்டாவளையில் தீ விபத்து; தென்னந்தோப்பு எரிந்து நாசம்



கிளிநொச்சி, ஓக. 04

கிளிநொச்சி, கண்டாவளை பிரதேசத்தில் திடீரென ஏற்பட்ட தீயினால் தென்னந்தோப்பு எரிந்து நாசமாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தர்மபுரம் பகுதியில் அமைந்துள்ள தும்புத் தொழிற்சாலை ஒன்றில் திடீரென ஏற்பட்ட தீயினால் 50 இற்கும் மேற்பட்ட பயன் தரக்கூடிய நிலையில் இருந்த தென்னை மரங்கள் எரிந்துள்ளன.

வீட்டின் உரிமையாளர்கள் வீட்டில் இல்லாதவேளை தும்பு தொழிற்சாலை தொழில் நடவடிக்கை இடம்பெறாத நிலையிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அப்பகுதி மக்கள், இடர் முகாமைத்துவக் குழுவினர், கிளிநொச்சி தீயணைப்புப் பிரிவினரின் உதவியுடன் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக தருமபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# வவுனியா தாக்குதல் சம்பவம் பிரதான சந்தேக நபர் கைது!

வவுனியா, ஓக. 04

வவுனியா - தோணிக்கல் பகுதியில் வீடு புகுந்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவத்தின் பிரதான சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த நிலையில், ஏற்கனவே கைது செய்யப்பட்ட 5 சந்தேக நபர்களையும் 11 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு வவுனியா நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

இந்த கொலை மற்றும் தாக்குதல் சம்பவம் தொடர்பான விசாரணை நேற்று முன் தினம் வவுனியா மாவட்ட நீதிமன்ற நீதிபதி அகமட் ரசீம் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது, 5 சந்தேக நபர்களையும் எதிர்வரும் 11ஆம் திகதி வரை அனுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்குமாறு நீதிபதியால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

மேலும், எதிர்வரும் 11ஆம் திகதி ஆள் அடையாள அணிவகுப்புக்காக 2 ஆம் 3ஆம் 4ஆம் 5ஆம் சாட்சிகளை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தவேண்டும் எனவும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தாக்குதலுக்காக பயன்படுத்தப்பட்ட வாள்கள் மற்றும் கோடரி, கத்தி, இரும்புக்கம்பி என்பனவும் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

வவுனியா குற்றப் புலனாய்வுப் பிரிவினர், வவுனியா பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவினர் உள்ளிட்ட பல பொலிஸ் குழுக்கள் விசாரணைகளை மேற்கொண்டே 20- 30 வயதுக்குட்பட்ட குறித்த சந்தேக நபர்களை கைது செய்துள்ளனர்.

பிரதான சந்தேகநபர் ஊடாக, இவர்களிடம் கொலையை மேற்கொள்ள ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டுள்ளதாகவும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்த நிலையில், சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபரான கூமாங்குளத்தைச் சேர்ந்த ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவரிடம் வவுனியா குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்றும் இவரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 24 ஆம் திகதி அதிகாலை வவுனியா-தோணிக்கல் பகுதியில் அமைந்துள்ள வீடொன்றில் பிறந்தநாள் விழா நடைபெற்றுக் கொண்டிருந்த போதே இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றது.

பிறந்தநாள் விழா நடைபெற்றுக் கொண்டிருந்த வீட்டுக்குள் பிரவேசித்த சந்தேக நபர்கள், அங்கிருந்தவர்களை கூரிய ஆயுதங்களால் கடுமையாக தாக்கி வீட்டுக்கும் தீ வைத்தனர்.

இதில் குறித்த வீடு தீக்கிரையாக்கப்பட்டதில் 23 வயதுடைய பெண்ணொருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதுடன், தீக்காயங்களுக்கு உள்ளான அவரது கணவரான 35 வயதுடைய சுகந்தன் என்பவர் யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், கடந்த 26 ஆம் திகதி உயிரிழந்தார். (அ)

# கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் முல்லைத்தீவு அதிபருக்கு கௌரவம்









யாழ்ப்பாணம், ஓக. 04

கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் இடம்பெற்றுவரும் நூற்றாண்டு கால புதன் ஒன்றுகூடலில் கடந்த புதன்கிழமை ஒட்டிசுட்டான் மகா வித்தியாலய அதிபர் சி.நாகேந்திரராஜா சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்டார்.

உள்ளத்தனையது உயர்வு என்ற பொருளில் உரையாற்றிய அவர் ஆசிரியர்கள் மாணவர்களது நிலையை அறிந்து செயல்பட வேண்டும் நேர்முகமாக சிந்திக்கும் திறனை வளர்த்துக் கொள்ள வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

இந்நிகழ்வினை கலாசாலையின் உடற்கல்வி பாடநெறி ஆசிரிய மாணவி எலிசபெத் கொட்பரினா கென்றி முன்னிலைப் படுத்தினார்.

அதிதி அறிமுக உரையினை விரிவுரையாளர் ந.அனந்தசயனனும், உடற்கல்விநெறி ஆசிரிய மாணவன் இ.இராஜகோகுலன் போதைப்பொருள் பாவனையை தடுப்பதில் ஆசிரியர்களின் பங்கு என்னும் தலைப்பிலும் உரையாற்றினர்.

நிகழ்வில் அதிதிப் பேச்சாளர் நாகேந்திரராஜா கலாசாலை அதிபரால் கௌரவிக்கப்பட்டார்.

(அ)

# மோ.சைக்கிளில் வந்தவர்களால் பெண்ணின் சங்கிலி அபகரிப்பு

வவுனியா, ஓக. 04

வவுனியா, குருமன்காடு பகுதியில் மோட்டார் சைக்கிளில் சென்ற இருவர் பெண் ஒருவர் அணிந்திருந்த தங்க சங்கிலியை அறுத்துக் கொண்டு தப்பிச் சென்றுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வவுனியா,குருமன்காடு காளி கோவிலுக்கு அருகாமையில் பெண் ஒருவர் சென்றுள்ளார். இதன்போது மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் குறித்த பெண் அணிந்திருந்த தங்கச்சங்கிலியை அறுத்துக்கொண்டு தப்பிச் சென்றுள்ளனர்.

குறித்த நபர்களை சிலர் துரத்தி சென்றபோதும் அவர்களை பிடிக்க முயலவில்லை.

இதேவேளை கடந்த செவ்வாய்க்கிழமை நெளுக்குளம் பகுதியில் மோட்டார் சைக்கிளில் சென்ற இருவர் பெண் ஒருவர் அணிந்திருந்த 5 பவுண் தங்கச்சங்கிலியை அறுத்துக்கொண்டு தப்பிச்சென்றுள்ளதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

(அ)

## கடனட்டை...

250 கிராம் நுண் பிளாஸ்ரிக் மனித உடலில் சேர்கின்றது.

இதேவேளை, நம் உடலுக்குள் நுண் பிளாஸ்ரிக் துகள்கள் செல்வதற்கு நைலோன் துணி மற்றும் நைலோன் மீன் பிடி வலைகள் முக்கிய காரணங்களாக அமைகின்றன என்று பல ஆய்வுகள் சுட்டிக்காட்டியுள்ளன இலங்கை மருத்துவ சங்கத்தின் செயலாளர் மருத்துவர் சஜித் எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

அத்துடன், பெரும்பாலான நுண் பிளாஸ்ரிக் துகள்கள் நாம் சுவாசிக்கும் காற்றின் மூலம் நம் உடலுக்குள் செல்கின்றன - என்றார்.

நுண் பிளாஸ்ரிக் துகள்களை அதிகமாக உட்கொண்டால் புற்றுநோய் ஏற்படலாம். எனவே, தாங்களாகவே பிளாஸ்ரிக் பொருட்களை அழிக்காமல் - மறுசுழற்சி செய்யும் மையங்களில் ஒப்படைக்க வேண்டும் என்று இதன்போது மருத்துவர்கள் கேட்டுக் கொண்டனர்.

பிளாஸ்ரிக் பொருட்களை எரிக்க வேண்டாம் என்றும் பரிந்துரைக்கப் பட்டுள்ளது. ஏனெனில், அவை அதிக எண்ணிக்கையிலான நச்சு இரசாயனங்கள் மற்றும் வாயுக்களை வெளியிடு கின்றன - என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## தீவகத்தை...

இந்த சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்த முக்கிய அம்சங்கள் வருமாறு,

“ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு முண்டு கொடுத்து வெள்ளையடிக்கும் வேலையை தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பினருடன் நீதியரசர் விக்னேஸ்வரனும் செய்து வருகின்றார். 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது சம்பந்தமாக இரண்டு சுற்றுப் பேச்சுகள் முடிவடைந்திருக்கின்ற நிலையில் ஜனாதிபதி பணிமனையிலிருந்து மூன்றாவது சுற்று பேச்சுக்காக எமக்கு மீண்டும் அழைப்பு வந்துள்ளது.

“நாங்கள் ஏற்கனவே குறிப்பிட்டது போல, தமிழ் மக்களின் அரசியல் தீர்வு சம்பந்தமான பேச்சு என்று சர்வதேச மட்டத்தில் காட்டிக் கொண்டு, அதே நேரம் தமிழ் மக்களின் இனப்பிரச்னைக்கு எந்தவித தொடர்பும் இல்லாத ஒற்றையாட்சிக்குள் இருக்கக்கூடிய ஒரு கட்டமைப்பு அடிப்படையில் அரசமைப்பில் இருக்கின்ற 13 ஆவது திருத்தம் தொடர்பாகப் பேச அழைத்துள்ளனர். இது மீண்டும் மீண்டும் வடக்கு, கிழக்குவாழ் தமிழர்களை முட்டாளாக்கும் வேலை மட்டுமல்ல, தமிழர்களை ரணில் விக்கிரமசிங்க மதிக்கத் தயாரில்லை அல்லது கணக்கெடுக்கத் தயாரில்லை என்பதையும் காட்டுகின்ற ஒரு செயலாகத்தான் இருக்கின்றது.

“குட்டக் குட்டக் குனிபவனும் மடையன், குனியக் குனியக் குட்டுபவனும் மடையன்” - என்பது போல இதைத் தெரிந்து கொண்டு பேச்சுகளில் கலந்து கொள்கின்ற தமிழ்த் தரப்புகள் தமிழ் மக்களுக்குப் பேரம் பேசக்கூடிய வாய்ப்புகளை முற்றிலும் இல்லாமலாக்கி, ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிக்கு - அதுவும் சிங்கள மக்களே ஏற்றுக் கொள்ளாத அல்லது அங்கீகரிக்காத ஓர் ஆட்சிக்கு - முண்டுகொடுக்கின்ற ஒரு செயலாக மட்டும்தான் இது அமைகிறது.

இதில், ரணில் விக்கிரமசிங்கவின் உண்மையான - ஒரு மோசமான - முகத்தை வெளிக் கொண்டுவரக்கூடிய விடயம் இன்றைக்கு, இன்னும் அம்பலமாகியிருக்கின்றது. ஒரு பக்கம் ஏதோ பெயரில் அதிகாரப் பகிர்வு என்றும், 13ஆம் திருத்தத்தை நடைமுறைப்படுத்தச் சொல்லியும் தமிழ் மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கின்றனர்.

இதேநேரம், இந்த அரசாங்கம் தீவகம் முழுவதையும் ஓர் அதிகார சபைக்குள்ளே கொண்டு வந்து அவற்றின் அனைத்து நிர்வாக பணிகளையும் கொழும்பால் நேரடியாக ஆட்சி செய்கின்ற ஒரு சட்ட வரைவு தயாரிக்கப்பட்டு அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படத் தயாராக உள்ளது.

இந்த சட்ட வரைவைத் தயாரிப்பது குறித்து ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணத்துக்கு கடைசியாக வந்தபோது ஒரு சில புத்திஜீவிகளை அழைத்து பேசப்பட்டிருக்கின்றது. ஆகவே, தீவகத் துக்கான அந்த அதிகாரக் கட்டமைப்பு என்பது மகாவலி அதிகார சபை அபிவிருத்தி திட்டத்தையும்விட மிக மோசமான வகையில் தமிழர்களின் தலைவிதியை முற்றிலும் மாற்றியமைக்கக்கூடிய வகையில் கொழும்பால் மட்டும் நிர்ணயிக்கின்ற ஓர் அதிகார சபையாகத்தான் அமைந்திருக்கின்றது.

இது மிகமிக மோசமானது. ஆனால், தமிழ் தரப்புககளுக்கு இது நன்றாகத் தெரியும். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கே இந்த விசயம் தெரிய வருகிறதென்றால் இன்றைக்கு ரணில் விக்கிரமசிங்கவுக்கு முண்டு கொடுக்கிற இந்தத் தரப்புகளுக்கும் நன்றாகத் தெரியும். ஆனால், தங்களை ஏதோ தேசியவாதிகள் என்று காட்டிக்கொண்டு இந்த பேச்சில் கலந்து கொண்டுள்ள தமிழரசு கட்சி, புளொட், ரெலோ மற்றும் விக்னேஸ்வரன் போன்ற தரப்புகளும் நன்றாகத் தெரிந்து கொண்டுதான் படுமோசமான இந்தச் செயல்பாடுகளை மூடி மறைத்து ரணில் விக்கிரமசிங்கவுக்கு தமிழ் மக்கள் மட்டத்தில் வெள்ளையடித்து கொண்டிருக்கின்றனர்.

ஆட்சியாளர்கள் தீவக நிலப்பரப்பை மத்திக்குள் கொண்டு சென்று அதை நிரந்தரமாகக் கைப்பற்றினால் நாங்கள் தீவகத்தை இழக்க வேண்டிய நிலைமை உருவாகும் எனத் தெரிந்து கொண்டு இந்தத் தரப்புகள் ஆட்சியாளர்களுக்கு துணை போகின்றன. ஏற்கனவே தீவகத்தில் மக்கள் வாழ்க்கையை நடத்த முடியாத அளவுக்கு நிலைமைய உருவாக்கி - படிப்படியாக மக்கள் அங்கிருந்து வெளியேறிய நிலைமைதான் இருக்கிறது. இந்தச் சந்தரப்பத்தைப் பயன்படுத்தி அங்கு சனத்தொகையை முற்றிலும் இல்லாமல் செய்து சுற்றுலா போன்ற விடயங்களைக் காட்டி சிங்கள மயமாக்கும் வேலைத் திட்டம்தான் இதற்குப் பின்னால் இருக்கிறது.

தீவக நிலப்பரப்புகள் முழுக்க முழுக்க கேந்திர முக்கியத்துவம் வாய்ந்தவை. ஏனென்றால், இந்தியாவுக்கும் ஏனைய நாடுகளுக்கும் முக்கியமானவையாக இருக்கக்கூடிய பிரதேசங்கள். அது முற்று முழுதாக சிங்களத் தரப்பிடம்தான் இருக்க வேண்டும். அது தமிழர் கையில் இருக்கக்கூடாது என்பதால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது என்பதில் எந்தவித சந்தேகமும் இருக்க முடியாது.

இந்தப் பிண்ணயில்தான் ஒன்றுமே இல்லாத 13 ஆம் திருத்தம் குறித்து இவர்கள் பேசி வருகின்றனர். 13 ஆம் திருத்தத்துக்குள் பேச்சை முடக்கி தமிழ் மக்களுக்கு ஏதோ கொடுக்கப் போவதாக பொய் காட்டப்படுகிறது. ஆனால், உண்மையில் நடக்கும் விடயம் இந்த அரசாங்கத்துக்கு வெள்ளையடித்து அரசாங்கம் சிங்கள மயமாக்கும் வேலைகளுக்கு அத்திபாரம் போடுகின்ற செயற்படுகளுக்கு துணை போகிற நிலைமைதான் நடக்கிறது.

சமஷ்டிக்காகத்தான் இருக்கிறோம் என்று வாக்கைப் பெற்றவர்கள் - தீர்வைப் பற்றி கதைக்க வேண்டிய இந்த நேரத்தில் அந்த சமஷ்டியை பற்றி உச்சரிக்காமலே ஒற்றையாட்சிக்குள்ளே தமிழ் அரசியலை முடக்க இங்கேயும் நடவடிக்கை எடுக்கின்றனர். ஆகவே, இரண்டு பகுதிக்கும் நடக்கிற இந்த மோசமான செயல்களுக்கு விடையாக பாராளுமன்றத் தேர்தல் மட்டும்தான் அமையும் - என்றும் கூறினார். (ஐ)

# கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனைய நிர்மாண பணி ஆரம்பம்!

கொழும்பு, ஓக. 04

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு கொள்கலன் முனையத்தின் செயல்பாட்டுக்கான கட்டட நிர்மாணப் பணிகள் நேற்று வியாழக்கிழமை ஆரம்பிக்கப் பட்டன.

4 தளங்களைக் கொண்ட இந்த கட்டட நிர்மாணத்துக்காக 130 கோடி ரூபாய் செலவிடப்படவுள்ளதாக துறைமுகங்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன், குறித்த கட்டடத்தின் நிர்மாணப் பணிகளை அடுத்த வருடம் பெப்ரவரி மாதத்துக்குள் நிறைவுறுத்த திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அந்த அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (ஐ)

# விபத்தில் சாரதி படுகாயம்!

தென்மராட்சி, ஓக. 04

மீசாலை - புத்தூர் வீதி சந்தியில் நேற்றிரவு இடம்பெற்ற விபத்தில் இ. போ. ச. பேருந்து சாரதி படுகாயமடைந்தார்.

நேற்றிரவு 7 மணியளவில் இடம்பெற்ற இந்த விபத்தில் வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த இ. போ. ச. பேருந்து பயணிகள் தரிப்பிடத்தை மோதித் தள்ளியது. பேருந்தில் ஏற்பட்ட திடீர் கோளாறே விபத்துக்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த விபத்தில் சாரதி படுகாயமடைந்தார். எனினும், தெய்வாதீனமாக பயணிகள் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை. மேலும், இந்த விபத் தால் அப்பகுதியில் இருந்த பேருந்து தரிப்பிடம் முழுமையாக இடிந்து வீழ்ந்தது.

விபத்து குறித்து சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## ஹெரோயின்...

இடத்துக்கு அழைத்துச் சென்றுள்ளார். பின்னர், அவரை யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இந்நிலையில், நேற்றுமுன்தினம் மாலை உயிரிழந்தார்.

அவரின் மரணத்துக்கு அதிகளவு ஹெரோயின் நுகர்வே காரணம் என்று மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ஐ)

## கிடைக்காத...

ஒன்றில் பங்கேற்று பேசுகையில், மாகாண சபையில் அதிகார கட்டமைப்பு இருக்கும்போது நிதியைத் திருப்பி அனுப்பி விட்டு தற்போது பொலிஸ், காணி அதிகாரம் என மக்களுக்கு பிழையான மனோ ரீதியான உற்சாகத்தை தமிழ் அரசியல்வாதிகள் வழங்குகின்றனர் - என்று சாடினார்.

அத்துடன், மாகாண சபை என்பது விசாலமான அதிகாரங்களை கொண்ட கட்டமைப்பு. வடக்கு, கிழக்கு மாகாண சபைகளுக்கு பொலிஸ், காணி அதிகரம் எனக் கூறிக்கொண்டிருப்பதை விடுத்து 13ஆவது திருத்தச்சட்டம் ஊடாக மாகாண சபைக்கு கொடுக்கப்பட்டுள்ள அதிகாரங்களை எப்படி வெல்லலாம் என சிந்திக்க வேண்டும்.

13ஆவது திருத்தச் சட்டம் ஊடாகவே மத்திய அரசாங்கமும் மாகாண அரசாங்கமும் சம்பந்தப்படுகின்றன. பெரு வீதிகள், ரயில் சேவை, மின்சாரம், இலங்கை போக்குவரத்து சபை, நீதிக் கட்டமைப்பு, தேசிய பாடசாலைகள், தேசிய மருத்துவமனைகள் தவிர அனைத்தும் மாகாண சபைகள் ஊடாக செயல்படுத்தப்படும் நிறுவனங்களாகும்.

அவற்றை வெற்றி கொண்டு வேலைத்திட்டத்தை மேற்கொள்ள முடியும். 13ஆவது திருத்த சட்டத்தால் கிடைக்காத சின்னச்சின்ன பிரச்னைகளை விடுத்து கிடைத்ததை வெற்றி கொண்டு செயல்படுத்த பாடுபட வேண்டும். 13 பற்றி பேசிக்கொண்டு வடக்கு, கிழக்கு மாகாண சபைகளுக்கு மத்திய அரசால் வழங்கப்பட்ட நிதியை கூட உரிய முறையில் செலவு செய்யாமல் திருப்பி அனுப்பும் நிலை காணப் பட்டது. எனவே, கிடைத்த அதிகாரத்தைப் பயன்படுத்தி அவற்றின் ஊடாக செய்ய முடிந்தவற்றை செய்ய வேண்டும். அதனைவிடுத்து கிடைக்காததற்காக காத்திருப்பது தேவையற்றது - என்றார். (ஐ)

## தமிழ்...

13ஆவது திருத்தத்தை நடைமுறைப் படுத்த ஜனாதிபதி எடுக்கும் நடவடிக்கைகளில் மகா நாயக்க தேரர்கள் தலையிட வேண்டும் என்பதை வலியுறுத்தவுள்ளோம் - என்றும் அவர் தெரிவித்தார்.

பொரளையில் உள்ள இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் பணிமனையில் நேற்று வியாழக்கிழமை நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இந்த விடயங்களைத் தெரிவித்தார். (ஐ)

## போதை...

பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலில் குறித்த கைது இடம்பெற்றது.

கைதான நபரிடம் 500 போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டன. கைதானவர் புத்தளத்தை சேர்ந்த 23 வயது நபர் என்றும் மேலதிக நடவடிக்கைகளுக்காக சந்தேக நபர் யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-03)

## பிரதமர்...

வெளிப்படுத்தப்படவில்லை.

இந்நிலையில், அண்மைக் காலமாக மட்டக் களப்பு மாவட்டத்தில் முன்னெடுக்கப்படும் காணி அபகரிப்பு, திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்கள், தொல்பொருள் எனும் போர்வையில் புத்தர் சிலைகள் வைப்பு என்பவற்றுக்கு எதிர்ப்பு தெரிவித்து கமக்கார அமைப்புகள் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## 13ஜ...

அரசாங்கத்தின் நோக்கமாகும். பிரச்னைகளுக்கு தீர்வு காணும் செயல்முறையில் தேசிய, இன, மத பேதமின்றி அனைவரும் செயல்பட வேண்டுமென்பதோடு இதற்கான பொது முறையொன்று உருவாக்கப்பட வேண்டும்.

அத்துடன், பொலிஸ் அதிகாரங்களை பகிர்ந்தளிப்பது தொடர்பில் பாராளுமன்றத்தில் பகிரங்க விவாதம் முன்னெடுக்கப்பட வேண்டும். சகலரும் கூட்டாக இணைந்து இந்த விடயத்தில் ஒரு தீர்மானத்துக்கு வர வேண்டும். 9 மாகாணங்களுக்கு 9 பொலிஸ் பிரிவுகளை உருவாக்கி 9 முதலமைச்சர்களின் கீழ் பொலிஸ் துறையை இயக்கும்போது ஏற்படும் பிரச்னைகளை உணரவேண்டும்.

எந்தவொரு நாடும் அவர்களுக்கு தேவையான சட்டங்களை அந்த நாட்டிலேயே நிறைவேற்றிக் கொள்ள வேண்டும். இதற்காகவே ஒவ்வொரு நாட்டிலும் பாராளுமன்ற கட்டமைப்பு இருக்கிறது என்றும் அவர் கூறினார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

## பளையில் கடற்படை துப்பாக்கி பிரயோகம்!

### ஒருவர் காயம்

கிளிநொச்சி, ஓக. 04

கிளிநொச்சி மாவட்டம் பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கிளாலி கடற்கரையில் சட்டவிரோத மணல் ஏற்றிய நபர்கள் மீது நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு கடற்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

பளை பகுதியைச் சேர்ந்த கஜேந்திரன் பிரணவன் என்பவரே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் பளை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

## முன்னாள் ஆளுநர்களுக்கு தொடர்ந்தும் பாதுகாப்பு

கொழும்பு, ஓக. 04

முன்னாள் அமைச்சர்கள் மற்றும் முன்னாள் ஆளுநர்களில் பலருக்கு தற்போதும் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

இதனடிப்படையில், அமைச்சரவை பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த சுமார் 100 பொலிஸார் இவர்களின் பாதுகாப்புக்கு வழங்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

முன்னாள் அமைச்சர்கள், ஆளுநர்கள் உட்பட சுமார் 20 பேருக்கு இந்த பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஆளுநர்களான ஹேமால் குணசேகர, சரத் ஏக்கநாயக்க, டிக்கிரி கொப்பேகடுவ, அனுராதா யஹம்பத் ஆகியோருக்கு தற்போதும் பாதுகாப்பு வழங்கப்பட்டு வருகிறது.

அதேவேளை கடந்த காலத்தில் பெரும் சர்ச்சைகளை ஏற்படுத்திய கலகொட அத்தே ஞானசார தேரருக்கு வழங்கப்பட்ட பொலிஸ் பாதுகாப்பை அவர் ஒரு மாதத்திற்கு முன்னர் தனது சுயவிருப்பத்தின் பேரில் விலகிக்கொண்டுள்ளதாக கூறப்படுகிறது. (அ)

## அரசின் செயல்களால் சஜித் திக்குமுக்காடி போயுள்ளார்

### பேராசிரியர் ஆசு மாரசிங்க

கொழும்பு, ஓக. 04

அரசாங்கத்தின் செயற்பாடுகள் காரணமாக எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச திக்குமுக்காடி போயுள்ளார் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஆசு மாரசிங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாடு முடிந்து விட்டது, நாடு அழிய போகிறது என்று எண்ணி எதிர்க்கட்சித் தலைவர் மகிழ்ச்சியடைந்தார். அவர் எதிர்பார்த்ததை போல நாட்டுக்கு எந்த பாதிப்பும் ஏற்படவில்லை என்பதால், அவர் திக்குமுக்காடி போயுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆட்சிக்கு வரும் நாட்டின் மத்திய வங்கியில் 20 மில்லியன் டொலர்கள் மட்டுமே இருந்தன. தற்போது 3 ஆயிரத்து 700 மில்லியன் டொலர்கள் கையிருப்பில் உள்ளன.

சுமார் 300 பொருட்களை இறக்குமதி செய்ய தடை விதிக்கப்பட்டிருந்தது. பசளை தொடர்பான பிரச்சினைகள் இருந்தன. இந்த வருட இறுதிக்குள் இறக்குமதி செய்ய தடை விதிக்கப்பட்டுள்ள பொருட்களுக்கான தடை நீக்கப்படும்.

சர்வதேச வர்த்தகத்தில் ஏற்றுமதி வருமானமாக நாம் மாதாந்தம் ஒரு பில்லியன் டொலர்களை சம்பாதிக்கின்றோம்.

நாட்டை முன்நோக்கி கொண்டு செல்வது தொடர்பில் மக்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

சர்வதேசத்தில் தனிமைப்பட்டு, கடன் பிரச்சினைகளை தீர்க்க முடியாது இருந்த எமக்கு சர்வதேசத்தின் ஒத்துழைப்புகள் கிடைத்து வருகின்றன.

சஜித் பிரேமதாஸ பிரதமர் பதவியை வழங்கிய போது ஏற்றுக்கொள்ளவில்லை. மீண்டும் அவருக்கும் ஆசையும் அச்சமும் என்ற நோய் ஏற்பட்டுள்ளது.

ரணில் விக்ரமசிங்கவினால் செய்ய முடியாது என்றே சஜித் அன்று எண்ணினார்.

சஜித் என்பவர் பொறுப்புகளை ஏற்கவும் சவால்களை எதிர்கொள்ளவும் பலமில்லாத, சுயநிலமிக்க பலவீனமான தலைவர் - என்றார். (அ)

## ஒற்றையாட்சியுடன் கூடிய மாகாணசபையே சிறந்தது

### கூறுகிறார் வாசுதேவ நாணயக்கார



கொழும்பு, ஓக. 04

**ஒற்றையாட்சியுடன் கூடிய மாகாணசபை முறைமை என்பது தான் எமது கொள்கையாகும் என பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.**

**கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.**

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்-

மாகாணசபை முறைமையுடன் ஒற்றையாட்சியும், ஒற்றையாட்சியுடன் கூடிய மாகாணசபை முறைமை என்பதுதான் எமது கொள்கையாகும்.

ஒற்றையாட்சிக்குள் மாகாண சபைகளுக்கு அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும்.

13 ஆவது திருத்தச்சட்டம் தொடர்பாக சர்வக்கட்சி மாநாடு இடம்பெற்றது. இதில் ஜனாதிபதியோ தனது தனிப்பட்ட யோசனையை எம் ஊடாக நிறைவேற்றிக் கொள்ள முயன்றார்.

ஆனால், அங்கு கலந்து கொண்டவர்கள் அனைவரும் மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு தான் வலியுறுத்தினார்கள்.

இதனால், அவருக்கு தனது திட்டத்தை நடைமுறைப்படுத்த முடியாமல் போனது.

ஒற்றையாட்சிக்குள் மாகாண சபைகளுக்கு அதிகாரங்கள் எவ்வாறு அமைய வேண்டும் என்பது, இறுதியில் வழங்கப்படவுள்ள அதிகாரங்களைப் பொறுத்தே தீர்மானிக்க வேண்டும் - என்றார். (அ)

## மலையக எழுச்சிப் பேரணி யாழ்ப்பாணத்தில் ஆரம்பம்





யாழ்ப்பாணம், ஓக. 04

வேர்களை மீட்டு உரிமைகளை வென்றிட எனும் தொனிப் பொருளில் மாண்புமிகு மலையக எழுச்சி பேரணி நேற்று யாழ்ப்பாணத்தில் ஆரம்பமாகியது.

தலைமன்னார் முதல் மாத்தளை வரை ஆரம்பிக்கப்பட்டுள்ள பேரணிக்கு வலுச்சேர்க்கும் நோக்கில் யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா வரை இப் பேரணி செல்லவுள்ளது.

யாழ். மத்திய பஸ் நிலையம் முன்பாக நேற்று காலை ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து பேரணியாக யாழ். நகரிலிருந்து வவுனியா நோக்கி புறப்பட்டுச் சென்றது.

இதன்போது மதத்தலைவர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (அ)

## குமார வெல்கம மீது தாக்குதல்



கொழும்பு, ஓக. 04

மத்துகமை நகரில் முன்னாள் அமைச்சரும் களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான குமார வெல்கமவை ஒருவர் தாக்கியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மத்துகமை நகரில் மரக்கறி சந்தைக்குள் ஏற்பட்ட வாக்குவாதத்தை அடுத்து வெல்கம தாக்கப்பட்டுள்ளார். தாக்குதலுக்கு உள்ளான வெல்கம சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். அவரை தாக்கிய நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இலங்கையில் கடந்த ஆண்டு போராட்டங்கள் நடைபெற்ற போது, குமார வெல்கம சிலரால் தாக்கப்பட்டு வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று குணமடைந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## 2024ஆம் ஆண்டு முதல் இலங்கையின் பொருளாதாரம் வளர்ச்சிப்பாதையில்!

### செஹான் சேமசிங்க உறுதி

கொழும்பு, ஓக. 04

2024ஆம் ஆண்டுமுதல் இலங்கையின் பொருளாதார வளர்ச்சிப் பாதையில் செல்லும். அதற்காக பொருளாதாரத்தை டிஜிட்டல்மயப்படுத்தும் வேலைத்திட்டங்களை அரசாங்கம் முன்னெடுத்து வருவதாக இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

சி.பி.ஏ. அவுஸ்திரேலியா நிறுவனம் கொழும்பில் நேற்று நடத்திய வர்த்தக மாநாடொன்றில் உரையாற்றும்போதே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சர்வதேச ரீதியாக அவதானம் செலுத்தும் தனியார் துறையினருக்கு முன்னுரிமையளிக்கும் வகையிலான திட்டங்களை அரசாங்கம் உருவாக்கி வருகிறது.

அதேபோன்று நிலைபேண்தகு டிஜிற்றல் பொருளாதாரத்தை உருவாக்கும் வாய்ப்புக்கான கதவுகளை திறந்துவிடுவதற்கும் அராசங்கம் ஆலோசித்து வருகிறது.

இலங்கையின் பொருளாதாரம் டிஜிற்றல்மயமாகுவதால் இயல்பு நிலைக்குத் திரும்பும் என்பதுடன், சர்வதேச முதலீட்டாளர்களையும் நாட்டுக்கு அழைத்துவர முடியும்.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் கட்ட கடன் திட்டம் இலங்கைக்கு கிடைக்கும். அதற்குள் கடன் மறுசீரமைப்புக்கான அனைத்து நடவடிக்கைகளும் இறுதிப்படுத்தப்படும்.

இலங்கை முன்னெடுத்துவரும் மறுசீரமைப்புத் திட்டங்கள் ஊடாக 2024ஆம் ஆண்டுமுதல் எமது பொருளாதார வளர்ச்சிப் பாதையில் பயணிக்கும்.

இலங்கை மீண்டும் முதலீடுகளுக்கான மற்றும் வர்த்தகத்துக்கான மையமாக உருவாகுமென்பதுடன், கைத்தொழில்களும் வளர்ச்சியடையும்.

நாட்டைவிட்டு வெளியேறியுள்ள புத்திஜீவிகளை மீண்டும் நாட்டுக்கு அழைத்துவருவது எமது இலக்காகவுள்ளது. அதன்மூலம் பல்வேறு நன்மைகளை நாம் அடைந்துகொள்ள முடியும் - என்றார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 04.08.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.